# தமிழரசு

1.2.1996 ரூ.3





எங்கும் செயல்மயம்
காவலர்களின்
முதல்வர்
காவல்துறை
புதிய சாதனை
வேளாண்மை

# இந்த இதழில்...

★ குடியரசு நாள் விழா .......................... 2

★ வறட்சி மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டம் .............. 6

★ காவிரி அன்னையே வருவாய்! ........... 9

★ மகளிர் முன்னேற்றம்: தமிழகமே முன்னோடி ........................ 18

★ தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாடு .......... 24


★ நூல் நயம் ........................................ 31

★ ஏழை நோயாளிகளுக்கு இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும்! மாண்புமிகு முதல்வர் ........................... 34

★ மதுரை மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம் ....... 38

★ குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் வழங்கும் விழா ...................... 43

★ கரூரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா: ........................ 45



**இதழ்தோறும் ஓர் இனிய குறள்:**

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம். (35)**

★ பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகியதே அறமாகும்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

தைத் திங்கள் : 18

மலர்: 26 இதழ்: 15

1.2.1996

விலை: ரூபாய் 3


## முதல் அட்டையில்...

சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, அமெரிக்க டூபாண்ட் நிறுவனத்தின் ஆசியா-பசிபிக் பிரிவு சேர்மன் திரு சார்லஸ் ஹாலிடே தலைமையில், ஆசிய பசிபிக் பிரிவு மானேஜிங் டைரக்டர், அதிகாரிகள் டேவிட் பாங்க், தாப்பர்-டூபோண்ட் நிறுவனக் கூட்டு மானேஜிங் டைரக்டர் திரு கவுதம் தாப்பர், மானேஜிங் டைரக்டர் வி. சாம்சிங் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

கும்மிடிப்பூண்டியில் தாப்பர்-டூபோண்ட் நிறுவனம் சார்பில் அமைக்கப்படும் தொழிற் சாலையினால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் அதிகாரிகள் உறுதிமொழி அளித்தனர்.

# குடியரசு நாள் விழா

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

அவர்கள் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ வருகை தந்து, சாலையில் இருபுறமும் கூடி யிருந்த மக்கள் வெள்ளத்தில் தெரிவித்துக் கொண்டனர். பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா



இந்தியக் குடியரசின் 47வது குடியரசு நாள் விழா, **26.1.1996** அன்று தமிழக அரசின் சார்பில், சென்னை மெரினா கடற் கரையில் அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலை அருகே மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

**மாண்புமிகு முதல்வர் வருகை**

அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலையும் மெரீனா கடற்கரைச் சாலையும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, அழகுடன் மிளிர்ந்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா வணக்கம் செலுத்திய வண்ணம் சென்றார்கள். அங்கே கூடி யிருந்த மக்கள் வான் பிளக்கும் ஆரவாரம் செய்து வாழ்த் தொலிகள் முழங்கினர்.

அவரைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் அவர்கள் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ வருகை தந்து கூடியிருந்த மக்களுக்குத் தனது வணக்கத்தைத் தெரி வித்துக் கொண்டு அணிவணக்க மேடையருகே வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களை மலர்ந்த முகத்தோடு வர வேற்றார். இருவரும் வணக்கம் அவர்கள்ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் ஆர்எஸ். நாக்ரா, சென்னைக் கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமோடர் ரவீந்திரநாத், சென்னை வான்படை அதிகாரி ஏர்க மோடர் பிரகாஷ்நாராயணன் தேவி, காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐசக் தேவாரம், இ.கா.ப., காவல்துறை ஆணையர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர் சட்டம் ஒழுங்கு திரு எஸ். குமாரசாமி, இ.கா.ப., ஆகிய



வர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

அதன் பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது. அப்போது தேசியகீதம் இசைக்கப் பட்டது. அச்சமயம் வானிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் மலர் தூவப்பட்டது. உடனே, மேதகு ஆளுநர் அவர்கள் அணிவகுப்பு மேடைக்குச் சென்று அணி வகுப்பு மரியாதையை ஏற்கத் தொடங்கினார்.

**அணிவகுப்பு**

தரைப்படை, கடற்படை, விமானப்படை வீரர்கள் அணி வகுத்துச் சென்றனர். சக்தி வாய்ந்த அஜீத் விமானங்கள், சேட்டக் ஹெலிகாப்டர், விமான வெடிகுண்டு ஆகியவை இராணுவ வண்டிகளில் அலங் காரத்தோடு எடுத்துச் செல்லப் பட்டது. இதைத் தொடர்ந்து முன்னாள் இராணுவப் படை வீரர்கள், மத்திய ரிசர்வ் காவல்படை, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப்படை, இரயில்வே பாதுகாப்புப்படை, சென்னை மாநகரக் காவல்படை, காவலர் குதிரைப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவலர் கூட்டுக்குழல் முரசிசை, சிறப்புக் காவலர் படைப்பிரிவு, கடலோரப் பாதுகாப்புக் குழு, தேசிய மாணவர் படை, பெண்கள் முதுநிலைப் பிரிவு, இராணி மேரிக் கல்லூரி கூட்டுக் குழல் முரசிசை, தேசிய மாணவர் தரைப்படை (இளநிலைப் பிரிவு,) தேசிய மாணவர் படை இளநிலைப் பிரிவு, (பெண்கள்) சாலைக் காப்புச் சுற்றுக் காவலர் (மகளிர்,) கூட்டுக்குழல் முரசிசை, தமிழ்நாடு சென்னை நகர் ஊர்க்காவல்படை, இராயபுரம், அரசு இளநிலை சிறப்பு இல்லம் கூட்டுக்குழல் முரசிசை, சென்னைப் பல்கலைக்கழக என்.எஸ்.எஸ். போன்றவர்கள் அணிவகுத்துச் சென்றனர். இந்த அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

**அண்ணா பதக்கம்**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இவ்வாண்டு தீரச் செயல்புரிந்த சேலம் மாவட்டத்தைச் சார்ந்த திரு கே.ராஜூ, சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த திரு பி. கிருஷ்ணமூர்த்தி, பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த செல்வி ஏ. அனிதா, காமராஜர் மாவட்டத்தைச் சார்ந்த திரு வி. ராதாகிருஷ்ணன், கன்னியா குமரி மாவட்டத்தைச் சார்ந்த செல்வன் டி. மாரியப்பன் ஆகிய 5 நபர்களுக்கு ரூ.2,000 மதிப் புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ.2,000க்கான காசோலையையும் வழங்கிச் சிறப்பித்தார். அண்ணா பதக்கம் பெற்ற ஐவரோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

**பள்ளிச் சிறார் ஆடல் பாடல்**

சென்னை சி.பி.ரோடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்கள் நடத்திய தமிழ்நாடு கிராமிய நடனமும்,

சென்னை ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்கள் நடத்திய ராஜஸ்தானிய கிராமிய நடனமும், சென்னை லேடி எம்.சி.டி.எம் பெண்கள் மேல் நிலைப்பள்ளி மாணவியர்கள் நடத்திய பாங்க்ரா நடனமும், சென்னை லேடி வெலிங்டன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர் நடத்திய குஜராத்தி நடனமும் சென்னை ராணி மெய்யம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர் நடத்திய கரகம், காவடி ஆட்டமும், சென்னை பாஸ்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியரின் ராஜஸ்தானிய அறுவடை நடனமும், சென்னை கோல சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் நாகாலாந்து மக்கள் பழங் குடியினர் நடனமும், சென்னை பிரசிடன்ஸி பெண்கள் மேல் நிலைப்பள்ளி மாணவியர்களின் கேரள நடனமும், சென்னை குழந்தைகள் தோட்ட மேல் நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் தமிழ்நாடு பொங்கல் நடனமும் ஆடிக் காட்டிய பிள்ளை மலர்களின் சாகசங்கள் மனதைக் கொள்ளைக் கொண்டன.

**கிராமியக் கலை நிகழ்ச்சிகள்**

தலையெங்கும் மயிலிறகை யும், உடலெங்கும் வட்ட, வட்ட வடிவில் வெள்ளை நிறத்தில் அலங்காரம் செய்து கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடிய குஜராத் மாநில ரத்வா நடனமும், உடலெங்கும் சந்தனம் பூசிக் கொண்டும், சாமந்தி மலர் மாலைகளை அணிந்து கொண்டும் ஆண்களும் பெண் களும் நடனமாடிய தமிழ்நாட்டு அழகர் நடனமும், ஆந்திரப் பிரதேசத்தில் ஆடிக் களிக்கக் கூடிய திம்சா நடனமும், சிகப்புச் சட்டையையும், மஞ்சள் நிறப் பேண்ட்டும் அணிந்து கொண்டு தலையெங்கும் பிடறி போல் முடிதரித்து வேகமான முறையில் சுழன்று, சுழன்று ஆடிக்காட்டிய கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த குருவாரா குனிதா நடனமும், கையில் கோல் கொண்டு மனதில் உறுதி கொண்டு ஆடிக்காட்டிய தமிழ்நாட்டுக் கோலாட்டமும், கேரள தைய்யம் நடனமும், உத்திரப்பிரதேச மாநில சைவா (சீரா) நடனமும், ஒரிசா மாநிலத் தைச் சார்ந்த பூவிலியா நடனமும் காண்போர் கண்களை அதிச யிக்க வைத்தன.

**அலங்கார ஊர்திகளின் அழகான அணிவகுப்பு**

மயிலை கபாலீஸ்வரர் ஆலய நாயன இசைக் கலைஞர்கள் கூடிய நாயன இசை ஊர்தி யோடு அலங்கார ஊர்திகள் அணிவகுத்து வரத் தொடங்கின.

தொடர்ந்து 'எங்கள் தமிழகம் எங்கும் செயல் மயம்' என்ற வாசகம் தாங்கிய செய்தி-மக்கள் தொடர்புத்துறை ஊர்தியும், காவலர்களின் முதல்வர், நவீன மயம், மனிதாபிமானம் என்ற வாசகங்கள் தாங்கிய காவல் துறை ஊர்தியும், புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில் சென்னை மாநகரை விளையாட்டு மாநகராக மாற்றிய சாதனை பாரீர்!' என்ற வாசகம் தாங்கிய சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்

## கலை நிகழ்ச்சிகளில் பரிசுகள் பெற்ற பள்ளிகள்

முதல் பரிசு: குழந்தைகள் தோட்ட மேல்நிலைப்பள்ளி - தமிழ்நாடு பொங்கல் நடனம்

இரண்டாம் பரிசு: லேடி எம்.சி.டி.எம். பெண்கள் மேல் நிலைப்பள்ளி - பாங்க்ரா நடனம்

மூன்றாம் பரிசு: ராணி மெய்யம்மை பெண்கள் மேல் நிலைப்பள்ளி - கரகம் காவடி

**அலங்கார ஊர்தியில் பரிசு பெற்ற அரசுத்துறை ஊர்திகள்**

முதல் இடம்: தோட்டக் கலைத் துறை.

இரண்டாம் இடம்: காவல் துறை,


மூன்றாம் இடம்: வேளாண்மைத் துறை.


**கிராமியக் கலை நிகழ்ச்சிகளில் பரிசு பெற்ற நடனங்கள்**

முதல் இடம்: ஒரிசா பூவிலியா நடனம்

இரண்டாவது இடம்: குஜராத் ரத்வா நடனம்

மூன்றாவது இடம்: கேரளா தைய்யம் நடனம்




ஊர்தியும், 'தோட்டக்கலைத் தொழில்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளைத் தோற்று விப்போம்' என்ற வாசகம் தாங்கிய தோட்டக்கலைத்துறை ஊர்தியும், 'குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் கொள்கைச் செயலாக்கம்' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊர்தியும், 'பழைமையை நினைவுகூறும், புதுமையை எடுத்துக்காட்டும் கோ–ஆப் டெக்ஸ்' என்ற வாசகம் தாங்கிய கோ–ஆப்டெக்ஸ் ஊர்தியும், 'சமூகநீதி, சமுதாய வளர்ச்சி' என்ற வாசகம் தாங்கிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறை ஊர்தியும், 'தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெறும் முயற்சியில் முன்னேறும் தமிழகம்' என்ற வாசகம் தாங்கிய தொழில், வணிகத்துறை ஊர்தியும்,' பசிப்பிணி போக்கும் உணவு உற்பத்தி வரலாற்றில் புதிய சாதனை' என்ற வாசகம் தாங்கிய வேளாண்மைத்துறை ஊர்தியும், 'மின் உற்பத்தி பெருக்கத்தில் புதிய எழுச்சி' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு மின் வாரிய ஊர்தியும், ஆல விருட்சமாகத் தழைத்து நிற்கும் கூட்டுறவு, ஜெ.ஜெ. கூட்டுறவு நகர் என்ற வாசகங்கள் தாங்கிய கூட்டுறவுத் துறை ஊர்தியும், 'தமிழ்நாடு இந்தியாவின் கவின்மிகு காட்சிப் பெட்டகம்' என்ற வாசகம் தாங்கிய சுற்றுலாத்துறை ஊர்தியும், ஊரை உயர்த்தும் உன்னதப் பணியில் கிராமம் செழிக்க! தமிழகம் தழைக்க! என்ற வாசகம் தாங்கிய ஊரக வளர்ச்சி துறை ஊர்தியும்', என்ன தவம் செய்தனரோ? தமிழ்ப் பெண்கள் உன்னை அன்னையாய்ப் பெற்றனர்' என்ற வாசகங்கள் தாங்கிய சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஊர்தியும், புதிய 'வீராணம் திட்டம் ரூ.1,638 கோடி மதிப்பீட்டில் 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஊர்தியும், 'பாறைகள் நிறைந்த குன்றுகளையும், பசுமையாக்கும் வன வளத் திட்டங்கள்' என்ற வாசகம் தாங்கிய வனத்துறை ஊர்தியும், 'சுற்றுச் சூழல் விழிப் புணர்வுத் திட்டங்கள்' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊர்தியும், 'நாடு காப்போரின் நலம் காப்போம்' என்ற வாசகம் தாங்கிய முன்னாள் படை வீரர் நலத்துறை ஊர்தியும், 'மீனவரின் வளமிகு வாழ்விற்கு வழி காட்டும் கலங்கரை விளக்கு' என்ற வாசகம் தாங்கிய மீன் வளத்துறை ஊர்தியும், அழகாக அணிவகுத்து வந்து தமிழக அரசின் பல்வேறு சாதனை களைப் பறைசாற்றியது.

மாணவ மாணவியர்களின் நடனத்தையும், அலங்கார ஊர்தி களின் அணிவகுப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர் களும், மேதகு ஆளுநர் அவர் களும் கண்டுகளித்தனர்.

விழா நிகழ்ச்சிகளை, கவிஞர் இளந்தேவன், டாக்டர் சுதா சேஷையன், டாக்டர் கரு. நாகராஜன், டாக்டர் சுமந்த் ராமன், செல்வி ரேவதி சீனிவாசன் ஆகியோர் மிக அழகான முறையில் வர்ணனை செய்தது குறிப்பிடத்தக்கது.

விழாவிற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் முக் கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவின் முடிவில் வண்ண வண்ண பலூன்கள் வானத்தில் பறக்க விடப்பட்டன.

**நிகழ்ச்சித் தொகுப்பு ச.சு.**




இராமநாதபுரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், தொடர்புடைய துறைகளின் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அரசு செயலர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோர்களுடன் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள்.

(27.1.96)

இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்:

# வறட்சி நிவாரணப் பணிக்கு ரூ.266 கோடி ஒதுக்கீடு

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**த**மிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, தமிழக அரசு ரூ.266 கோடியை ஒதுக்கியுள்ளதாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இராமநாதபுரத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

தமிழகத்தில் இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டதால், 15 மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக, இராமநாதபுரம், பசும்பொன், மதுரை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திண்டுக்கல் உட்பட பல்வேறு மாவட்டங்களில் குடிநீருக்குக் கூடத் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

மாவட்டங்களில் வறட்சி குறித்து ஆய்வு செய்வதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆலோசனை செய்யவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 27.1.96 அன்று இராமநாதபுரம் வந்தார். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் காலை 11 மணி அளவில் ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ்.டி. சோமசுந்தரம், திரு சு. முத்துசாமி, திரு டி.எம். செல்வகணபதி, திரு எஸ். கண்ணப்பன், திரு மு.தென்னவன், திரு வி. சத்தியமூர்த்தி, திரு கா.ப. பட்டாபிராமன், திரு இ. மதுசூதனன் ஆகியோரும், தலைமைச் செயலாளர், திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., வருவாய்த்துறைச் செயலாளர் திரு எஸ். மெய்க்கண்டதேவன், இ.ஆ.ப., விவசாயத்துறைச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு நாராயணன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., உணவுத்துறைச் செயலாளர் திரு சீனிவாசன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு ராஜாராம், இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திரு வரதராஜுலு, இ.ஆ.ப., நில வருவாய்த்துறைச் செயலாளர் திரு ரகுபதி, இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வரின் இணைச் செயலாளர்கள் திரு எஸ். ஆதிசேஷய்யா இ.ஆ.ப., திரு எஸ்.எஸ். ஜவகர் பாபு, இ.ஆ.ப., துணைச் செயலாளர் திரு எஸ். நடராஜன் மற்றும் 15 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலவரம் குறித்துப் பேசி அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலவரம் குறித்து இங்கு பல்வேறு உபயோகமான கருத்துக்கள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளோம். மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக மாவட்டங்களுக்குச் சென்று வறட்சி நிவாரணப் பணிகளை மிகப் பெரிய அளவில் மேற்கொள்ள வேண்டும். அதில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, ஊரக

வளர்ச்சித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, விவசாயத்துறை, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் விவசாயப் பொறியியல் துறை ஆகியவை இணைந்து இந்த நிவாரணப் பணிகளை மேற் கொள்ள வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நிவாரணப் பணிகளை வாரத் திற்கு ஒரு முறை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்ய வேண்டும். நிவாரணப் பணி களை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒரு தடையல்ல. மிகவும் பின்தங்கியப் பகுதிகளில் மக்க ளின் தேவையை உணர்ந்து பொதுமக்களின் ஆலோசனை களைக் கேட்டு, நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செயல் படுத்த வேண்டும்.

“இந்த நிவாரணப் பணி களால் விவசாய வேலைகள் இல்லாமல் இருக்கும் தொழி லாளர்களுக்குப் பயன்தரத்தக்க சில வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டும். விவசாயப் பணிகள் பாதகிக்கப்பட்டுள்ள தால், நாட்டில் உணவு கையிருப்புக் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதற் கிடையே ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோ அரிசி வழங்க உத்தரவிட்டுள்ளேன். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ரேஷன் கடைகளில் முறையாக விநி யோகம் நடைபெறுகிறதா என்பதைத் தனிப்பட்ட அக்கறை யுடன் கவனித்துச் செயல்பட வேண்டும். சரியான நேரத்திற்கு உணவுப் பொருட்கள் ரேஷன் கடைகளுக்குச் சென்றடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“ஒவ்வொரு மாவட்டத்திலும் குடிநீர் நிலவரம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து ஆய்வு செய்ய நிலநிர்வாகத்துறை மற்றும் பிற துறைகளின் ஆணையாளர் களுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குத் தொடர்ச்சியாகச் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் நடப்பது குறித்துத் தனிப்பட்ட அக்கறை யுடன் கணக்கு வழக்குகளை வைத்துக் கொண்டு, நிவாரண உதவிகள் பொதுமக்களுக்குப் போய் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தாராளமாகவும், விரைவாகவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட, அரசு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு முழு சுதந்திரம் அளித்துள்ளது. இதற் கான உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும் நிவாரணப் பணிகள் குறித்தான ஆய்வு அறிக்கை களை அரசுத் தலைமைச் செயலாளருக்கு வாரம் ஒரு முறை அனுப்பி வைக்க வேண்டும். நிதிகள் ஒதுக் குவதிலும் தேவையான பொருட்கள் வாங்குவதிலும் உள்ள சிரமங்கள் குறித்து அந்தந்த மாவட்டங்களுக்குத் தொடர்புடைய ஆணை யாளர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுடன் உடனுக் குடன் தெரிவித்து அதற்கான அனுமதிகளைப் பெற்று நிவா ரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

“தமிழகத்தில் வறட்சி காரண மாக ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க கூடுதலாக ரூ.72 கோடி ஒதுக்குகிறேன். இந்த நிதியின் மூலம், மேலும், பல இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், குடி நீர்க் குழாய்கள் பதிக்கவும் லாரிகள் மூலம், குடிநீர் விநியோகம் செய்யவும் பழு தடைந்த பம்புசெட்டுகளை மாற்றவும், ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை ஆழப் படுத்தவும், அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

“கடந்த டிசம்பர் 30ஆம் தேதி பதினைந்து மாவட்டங்களில் வறட்சி நிவாரண வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக ரூ.17.50 கோடி அரசு ஒதுக்கியுள்ளது. இந்தப் பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஜவகர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் பாதிக்கப் பட்டுள்ள 15 மாவட்டங்களில் மேலும், பல விவசாயத் தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பு

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

* நாம் எதை **இழந்து விட்டாலும், கவுரவத்தை மட்டும் இழக்க இடம் தரக்கூடாது.**

**—சாக்ரட்டீஸ்**

# காவிரி அன்னையே வருவாய் !

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி' என்று வர்ணிக்கப்படும் தமிழ்ப் பெருங் குடி மக்களின் ஊனோடும், உயிரோடும், உணர்வோடும் இரண்டறக் கலந்தது காவிரி. தமிழகத்தில் ஓடும் வேறெந்த ஆற்றுக்கும் இல்லாத வரலாற்றுச் சிறப்பும், தமிழகத்துப் பண் பாட்டின் நாற்றங்காலாகவும், நாகரிகத்தின் தொட்டிலாகவும் ஒருங்கே விளங்கிடும் திரண்ட புகழ்கொண்டது காவிரி.

**சுடுகின்ற வேதனை**

எகிப்து தேசம் நைல் நதியின் நன்கொடையெனில், தமிழ்நாடு, காவிரியின் நன்கொடைதானே! அந்தக் காவிரி பாய்வதால் தானே, சோழவளநாடு தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்ற நற்பெயரைத் தன்னிடத்தே தக்கவைத்து, 'சோணாடு சோறு டைத்து' என்ற சொற்பதத்தையும் தமிழுக்குத் தந்தது. காவிரியைக் கர்நாடகத்தார் தடுத்ததால், சோழவளநாடு, எங்கு நோக் கினும் மணலே விரியும் சகாரா வாகவோ, தார்ப் பாலை வனமாகவோ மாறிடுமோ, முல்லையும், குறிஞ்சியும் முறை மையின் திரிந்து பாலை யென்பதோர் படிவம் கொண்டிடுமோ என்ற ஐயப் பாட்டை- அனைவர் நெஞ்சிலும் சுடுகின்ற வேதனையை சில காலமாகத் தந்து கொண்டி ருக்கிறது.

**நீதியமைப்புகளை மதிக்க வேண்டும்**

சட்டம், நீதி, நேர்மை இவை களைத் தொன்றுதொட்டே மானுடம் மதித்தே பழகி வந்திருக்கிறது. சட்டங்களையும் நீதியமைப்புகளையும் மதித்து நடக்க வேண்டியது மானுடத்தின் தார்மீகக் கடமைகளுள் ஒன்றாகும். அப்படி மதியாதார் வாசலில் ஒழுக்கம் மிதியாது ஓடி மறைந்துவிடும்.


**காலங்கடத்தும் தந்திரம்**

காவிரியாற்றின் வரலாற்றை நோக்கினால் சட்டங்களையும், நீதியமைப்புகளையும் கர்நாடக மாநிலம் சில குறுகிய நோக்கங் களுக்காக அவற்றை புறக் கணித்து சட்டபடி கட்டுப் படுத்தும் நடுவர்மன்ற ஆணையைக் கூட மதியாமல், நிறை வேற்றாமல் இருப்பதைக் காணலாம். இருப்பினும், கர்நாடக மாநிலமும் தன்னுடைய் செயல் நியாயமானது என்று ஆண்டாண்டுக் காலமாகப் வாதாடுவதைக் காணலாம். காலங்கடத்துவது நீதியை மறுப்பதற்கொப்பாகும். (Justice delayed is Justice denied) என்பது வழக்கு. காலங்கடத்தும் தந்திரத் தையே (Delayingtactics)கர்நாடக மாநிலம் கையாண்டு, நீதிக்கு ஒவ்வாத, செயல்களை கடைப் பிடித்து வருகிறது.

வரலாற்றுக் காலத்திலேயே அவ்வப்போது ஒரு சில சிக்கல்கள் ஏற்பட்டதாக வரலாற்றுச் செய்திகள் வழங்கி வந்துள்ளன.

**மேலணை**

ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க காலத்தில் (கி.பி. *1788-89)* காவிரியில் தண்ணீர் தாராளமாக வந்ததால், தஞ்சை மாவட்டத்தில் நிலையான சாகுபடி செய்யப்பட்டது. சாகு படிக்கு வேண்டிய தண்ணீரை முறைப்படுத்தும் முகத்தான் சர் ஆர்தர் காட்டன் என்பவர்



வாய்மை வெல்லட்டும் என்று வரவேற்கும் முதல்வர் அவர்களுடன் நிபுணர் குழுவினர் (6.1.96)

கல்லணையில் வெண்ணாறு கிளைக்கும், காவிரி கிளைக்கும் தலைமதகுகள் அமைத்தார். கொள்ளிடத்தில் காவிரி நீர் வீணாகி வழிந்து விடாமலிருக்க மேல் அணையும் (Upper Anaicut) இவரால் கட்டப்பட்டது. இதன் பிறகு 1836-ஆம் ஆண்டில் கொள்ளிடத்தின் குறுக்கே இன்னொரு அணை கட்டப் பட்டது. இதுவே கீழ் அணை (Lower Anaicut) ஆகும். இதனால், கொள்ளிடப் பாசனப் பகுதிக்கு நிலையான நீர் வழங்கும் முறை ஏற்பட்டது.

### 1892 ஒப்பந்தம்

தமிழகத்தில் பாசன ஒழுங்கு செய்யப்பட்டதைப் போலவே மைசூர் பகுதிகளிலும் செய்யப் பட்டது. மேலும் ஒருபடி மேலே போன மைசூர் அரசு பாசன வசதியைப் பெருக்கும் நோக்கத் துடன் அணைக்கட்டுகளைக்கட்ட முயற்சி செய்தது. இதனால் சென்னை மாகாணத்தில் ஏற் கெனவே வளர்ச்சிப் பெற்றுள்ள பாசனம் பாதிக்கப்படும் என்று சென்னை மாகாண அரசு அச்சம் தெரிவித்து வந்தது. இது தொடர்பான பேச்சுவார்த் தைகள் 1890-ஆம் ஆண்டி லிருந்து இரண்டாண்டுகள் நடைபெற்றன. இறுதியாக 1892-ஆம் ஆண்டில் மைசூர் அரசுக்கும் சென்னை மாகாண அரசுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி, மைசூர் அரசு காவிரியிலோ அல்லது அதன் துணை நதி களிலோ புதிய பாசன நீர்த் தேக்கம் கட்ட விரும்பினால் அந்தப் பணிகளைத் தொடங்கும் முன்பே, தொடங்கப்படும் பணி தொடர்பான முழு விவரங் களையும் சென்னை மாகாண அரசுக்கு அனுப்பி, அரசின் முன் இசைவைப் பெறவேண்டும் என்பது போன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டன. முன் இசைவு தருவது பற்றி இரண்டு அரசு களுக்கிடையே ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அந்தப் பிரச்சினையில் இரு அரசு களாலும் நியமிக்கப்படும் நடுவர்கள் அல்லது மத்திய அரசின் தீர்வுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் விதி முறைகள் சுமுகமான நட்புக்கு வழிவகுத்தன.

### கண்ணம்பாடி அணை

கிட்டத்தட்ட இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் இரு அரசுகளும் காவிரியில் நீர்த்தேக்கம் கட்ட வில்லை. தென்மேற்குப் பருவக் காற்றால் கிடைக்கும் மழை நீரைத் தேக்கி, பாசனத்திற்குச் சாகுபடிக்காலம் முழுவதுக்கும் பயன்படுத்த சென்னை மாகாண அரசு காவிரியில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்கத் திட்டம் தீட்டியது. அதே வேளையில், மைசூர் அரசும் காவிரியின் குறுக்கே கண்ணம்பாடி என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தீட்டி, அத் திட்டத்துக்கு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகளின்படி சென்னை மாகாண அரசுக்கு இசைவு கோரி அனுப்பி வைத்தது. இதனை ஆய்வு செய்த சென்னை மாகாண அரசு காவிரி டெல்டாப் பாசனத்தைக் கண்ணம்பாடி நீர்த்தேக்கம் பெரிதும் பாதிக்கும் என்ற முடிவுக்கு வந்தது. எனவே அந்தத் திட்டத்துக்கு இசை வளிக்க சென்னை மாகாண

அரசு ஒப்புக்கொள்ளவில்லை.

பின்னர், கோலார் தங்கச் சுரங்கப் பணிகளுக்கு மின்சக்தி வழங்க அமைக்கப்பட்ட சிவசமுத்திரம் திட்டத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டிய கட்டாயம் மைசூர் அரசுக்கு ஏற்பட்டதால் சென்னை அரசு 11 டி.எம்.சி. நீரைத் தேக்குவதற்கான உயரமும், பிற்காலத்தில் சென்னை அரசின் அனுமதி கிடைக்கும்போது 41 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கும் வசதிக்காக உயரத்துக்கேற்ற அகலமான அடித்தளமும் கொண்ட அணை கட்டிக்கொள்ள அனுமதி கோரியது. இவ்வாறு அகலம் அதிகமான அடித்தளம் அமைப்பதால் பிற்காலத்தில் பெரிய நீர்த்தேக்கம் அமைக்க அதையே காரணமாக வலியுறுத்தப்பட மாட்டாது என்றும், அணையில் நீர்தேக்குவதற்கான விதி முறைகள், சென்னை அரசின் கருத்துக்கு இசைந்து முடிவு செய்யப்படும் என்றும் மைசூர் அரசு உறுதி அளித்தது. சென்னை அரசும் இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் கண்ணம்பாடி நீர்த்தேக்கம் கட்டிக்கொள்ளலாம் என்று இசைவளித்தது. மைசூர் அரசும் 1911-ஆம் ஆண்டு அணையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கிற்று.

**முதல் காவிரிப் பிரச்சினை**


சென்னை மாகாணத்தின் சாகுபடிக்குத் தேவையான நீரைப் பயன்படுத்தும் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க காவிரியில் மேலணையில் தேவைப்படும் நீர் அளவு குறித்தும் அத்தகைய நீர்வரத்தை உறுதி செய்வதற்கான வழிகள் பற்றியும் இரு அரசுகளுக்குமிடையே கருத்து வேறுபாடு தோன்றியது.

**1924 - ஒப்பந்தம்**

1914-ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினை அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி எச்.பி. கிரிபிஃன் என்பவரின் தீர்ப்புக்காக விடப்பட்டது. அவரது தீர்ப்பை சென்னை அரசு ஏற்க இயலாத நிலையில், மத்திய அரசுக்கு முறையீடு செய்தது. மத்திய அரசும் 1916-ஆம் ஆண்டில் சென்னை அரசின் வாதத்தை ஏற்காமல், கிரிபிஃன் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது. இந்தத் தீர்ப்பின் விளைவால் சென்னை மாகாணத்தின் சாகுபடிப் பரப்பில் பல பிரச்சினைகள் ஏற்படும் என்று கருதி சென்னை அரசு இங்கிலாந்திலிருந்த இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கான செயலாளரிடம் நீதி வேண்டி மேல்முறையீடு செய்தது. அவர் இந்திய அரசு தலையிட்டு செய்த முடிவு 1892 ஒப்பந்த ஷரத்துக்கு ஒவ்வாதது என்று கருதி, இரண்டு அரசுகளும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமூகமான முடிவுக்கு வரவோ அல்லது மறுபடியும் ஒரு நடுவரிடம் இந்த தாவாவை விசாரிக்கவோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார். இதனால், நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 1924-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் நாள் இரு அரசுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு கையெழுத்தானது.

**காய்ந்துபோன நெற்பயிரைக் கண்ணீரால் ஈரமாக்கி, நிபுணர்கள் கையில்தந்து நீதிகோரும் தஞ்சைப் பெண் (4.1.96)**





**புனல்மோதும் மேட்டூர் வறண்டு அனல் வீசும் அணையானதைக் கண்டு அதிர்ந்து நிற்கும் நிபுணர் குழு (4.1.96)**

### கிருஷ்ணராஜ சாகர் அணை

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தைக் கட்டி **1929-ஆம்** ஆண்டு முதல் செயல்படுத்தியது. இதே போல சென்னை அரசு **1934-ஆம்** ஆண்டில் மேட்டூர் அணையைக் கட்டி முடித்தது. மைசூர் அரசு கன்வா, பைரமங்களா, பார்கோஹள்ளி, ஹிம்சா கால்வாய் போன்ற சில திட்டங்களைச் செயல்படுத்தியது. சென்னை அரசும், காவிரியின் கிளை நதிகளான பவானியின் குறுக்கே கீழ்ப் பவானி நீர்த்தேக்கத்தையும், பவானிசாகர் நீர்த்தேக்கத்தையும் **1953-ஆம்** ஆண்டு கட்டியது. அமராவதியிலும் ஓர் சிறு நீர்த்தேக்கத்தையும் ஏற்படுத்தியது.

**1947-ஆம்** ஆண்டு இந்தியா விடுதலையடைந்த பிறகு **1956-ஆம்** ஆண்டில் மாநிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டன. இதன் பிறகே காவிரி பிரச்சினை உச்சக்கட்டத்தை எட்டத் தொடங்கியது.

**1892** மற்றும் **1924-ஆம்** ஆண்டுகளில் போடப் பட்ட காவிரி நதிநீர் ஒப்பந்தங்களைப் படிப்படியாகக் கர்நாடக மாநிலம் மீறத் தொடங்கியது. கர்நாடக மாநிலம் புதிய நீர்த் தேக்கங்களைக் கட்ட தமிழ் நாட்டின் இசைவைப் பெறாமலேயே திட்டங்கள் தீட்டியது. தமிழ் நாடும், மத்திய அரசும் கர்நாடகத் திட்டங்களுக்கு இசைவு அளிக்கவில்லை. இருப்பினும் கர்நாடக அரசு தன்னிச்சையாகக் காவிரிப் படுகையில் நீர்த் தேக்கங்களையும், கால்வாய்களையும் அமைத்துப் பாசனப் பரப்பை வரம்புமீறி அதிகப் படுத்தியதால் தமிழ்நாடு அரசு கண்டனம் தெரிவித்தது. இந்த மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினையைத் தீர்க்க **1968-ஆம்** ஆண்டு முதல் மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் தலைமையின் கீழ் காவிரிப் படுகையைச் சார்ந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் நிலையில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. இறுதியாகப் பேச்சுவார்த்தைகள் எந்தப் பலனும் தரவில்லையே எனத் தமிழ்நாடு அரசு **1970-ஆம்** ஆண்டில் காவிரிப் பிரச்சினையை நடுவர் மன்றத்துக்கு விடும்படி மத்திய அரசைக் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டது. மீண்டும் ஏற்கெனவே நடந்ததைப் போலவே மத்திய அரசு காவிரிப்படுகை முதலமைச்சர்கள் அளவிலான கூட்டங்களை நடத்தியது. இதிலும் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படாததால் வேறுவழியின்றி மத்திய அரசு நடுவர் மன்றத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு **1971-ஆம்** ஆண்டில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

**உண்மை நிலை அறியும் குழு**

உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது, அன்றைய பாரதப் பிரதமர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியால் அப்போதைய மத்திய நீர்ப் பாசனத்துறை அமைச்சர் தலைமையில், காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. மூன்று மாநில முதல்வர்களும் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் புள்ளி விவர நிலைஅறியும் குழு ஒன்று அமைக்க ஒப்புக்கொண்டனர். அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கைத் திரும்பப் பெற்றது.

காவிரிப் பிரச்சினையின் புள்ளி விவர நிலை அறியும் குழுவால் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, **1971-72-ஆம்** ஆண்டில் காவிரி பாயும் மாநிலங்கள் அனைத்தும் பயன் படுத்திய மொத்த நீரின் அளவு காவிரியாற்றின் மொத்த நீர் வளத்தைக் காட்டிலும் அதிக மாக இருந்ததால், மாநிலங்கள் பங்கிட்டுக் கொள்வதற்கு உபரிநீர் இல்லை. இருந்தாலும் பாசன மேலாண்மையில் சில நவீனத் தொழில்நுட்பத்தைக் கையாளுவதன்மூலம், சேமிக்கப் படும் நீரைக் கொண்டு மேலும் பாசனப்பரப்பை அதிகரிக்கலாம் என்று மத்திய அரசு தெரி வித்ததன் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன.

**வரைவு ஒப்பந்தங்கள்**

தொடர்ந்து மத்திய அரசு காவிரிப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக **1974** மற்றும் **1976-ஆம்** ஆண்டுகளில் வரைவு ஒப்பந்தங்களை உருவாக்கியது. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் **1924-ஆம்** ஆண்டின் ஒப்பந்த விதிமுறைகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படவில்லை. குறிப்பாக, பழைய பாசனப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு பற்றித் தெளிவாகச் சொல்லப் படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு இந்த ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நேரத்தில் கர்நாடக அரசு **1924-ஆம்** ஆண்டு ஒப்பந்தம் இனி அமலிலில்லை என்று கூறி, தன்னிச்சையாகக் காவிரியில் ஆண்டுதோறும் நீர்த்தேக்கங்களை படிப் படியாக கட்டி, நீரையும் தேக்கியது. வழிந்துவரும் உபரி நீர் மட்டும் தமிழகத்துக்கு வரலாயிற்று.

தமிழகத்தில் சாகுபடி நிலைமை மோசமாவதைக் கவனத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு **29.5.1975** அன்று மீண்டும் மத்திய அரசை, காவிரி நதிநீர்ப் பிரச்சினையை நடுவர்மன்றத் துக்கு விட வேண்டும் என்று வலியுறுத்தியது. மத்திய அரசும் மாநில முதல்வர்களிடையே பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டேயிருந்தது. ஆனால், தீர்வு எதுவும் கண்டபாடில்லை.

பேச்சுவார்த்தைகள் பய னற்றவை என்பதாகவும் கால தாமதத்தால் இடர்பாடு ஏற்படுத்துவதாகவும், உணர்ந்து கொண்டது தமிழ்நாடு அரசு. **16.6.1986** அன்று பெங்களூரில் நடந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழக அரசு அந்தப் பேச்சு வார்த்தை தோல்வி அடைந்த தாக அறிவித்து காவிரிப் பிரச்சினையைக் காலம் தாழ்த் தாமல் உடனடியாக நடுவர் மன்றத்துக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

**உச்சநீதி மன்றத்தில் வழக்கு**

**1983-ஆம்** ஆண்டு காவிரிப் பிரச்சினையை நடுவர் மன்றத் துக்கு விடும்படி தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளை பொருள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் உச்சநீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தது. அதற்குத் தமிழ்நாடு அரசு ஆதரவளித்தது. **4.12.1986** அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து மத்திய அரசு நடுவர் மன்றத் தினை உடடினயாக அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு வரும்போதெல்லாம் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக அவ் வப்போது மத்திய அரசு கூறி வந்தது.

உச்சநீதிமன்றத்தின் ஆணைக் கிணங்கி **1988-ஆம்** ஆண்டு மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கர்நாடக முதல் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியும், தீர்வு ஏற்படாமல் போனது. **5.4.90** அன்று காவிரிப் படுகையைச் சேர்ந்த மாநில முதல்வர்களின் கூட்டத்தை மாண்புமிகு மத்திய

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டினார். தொடர்ந்து தமிழ்நாடு கர்நாடக மாநில முதல்வர்களின் பேச்சுவார்த்தையும் நடந்தது. எவ்விதப் பலனும் ஏற்பட்டபாடில்லை. இந்த நேரத்தில்தான் அதாவது **24.4.90** அன்று உச்சநீதிமன்றத்தில் இப்பிரச்சினைத் தொடர்பான ரிட் மனு இறுதி விசாரணைக்கு வந்தது. காவிரிப் பிரச்சினையில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லையென உச்சநீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

**நடுவர் மன்றம் அமைத்தல்**

மத்திய அரசு அதனுடைய சட்டப்படியான கடமைகளை நிறைவேற்றும் வகையில் காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைப்பது பற்றியும், இது பற்றிய அறிவிப்பை ஒரு மாதக் காலத்திற்குள் அரசிதழில் வெளியிடவும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.

மத்திய அரசும் **2.6.1990** அன்று தனது அறிக்கையில் நடுவர் மன்றம் அமைப்பதாக அறிவிப்பு செய்தது.

**நடுவர் மன்றம்**

நடுவர் மன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி சிட்டகோஷ் முகர்ஜி தலைமையில் நீதிபதி எஸ்.டி. அகர்வால், நீதிபதி என்.எஸ்.ராவ் ஆகியோரும் இருந்தனர்.

**நடுவர் மன்றக் குழு பயணம்**

நடுவர் மன்றம் காவிரிப் படுகை மாநிலங்களில் விரிவான சுற்றுப்பயணம் செய்தது. நேரிடையாகவே மக்களைச் சந்தித்து உள்ள நிலைகளைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டது. பின்னர், இறுதித் தீர்ப்பு அளிப்பதற்கு முன்னதாக, தற்சமயம் தண்ணீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் பயிர்களைக் கருத்தில் கொண்டு இடைக்காலத் தீர்ப்பு ஒன்றினை அறிவித்தது. அதில் தமிழ் நாட்டுக்கு ஆண்டுதோறும் **205** டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்றும் தண்ணீர் விடுவது தொடர்பாக மாதவாரி அட்டவணையையும் அந்நீரை வாராவாரம் சரி பங்காக விடவும், ஓர் ஆணையை வெளியிட்டது. எப்போதும் சாக்குப்போக்குச் சொல்லியே பழகிவந்த கர்நாடக அரசு, நடுவர் மன்றத்துக்கு இடைக் காலத் தீர்ப்பு அளிக்கும் தகுதி இல்லையென்றும், நடுவர் மன்றத்தின் அதிகாரத்தையும் கர்நாடக அரசு மறுத்து ஓர் அவசரத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது.

**கர்நாடகத்துக்கு அதிகாரமில்லை**

உச்சநீதிமன்றம் கர்நாடக அரசின் இந்தச் செயலைக் கண்டித்தது. தன்னிச்சையாகப் புதிதாக அவசரச் சட்டம் பிறப்பிக்க கர்நாடக அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. எனவே, கர்நாடக மாநில ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டம் அரசியல் அமைப்பு சட்டத்திற்கும், அதன் அதிகாரத்திற்கும் புறம்பானது என்றும், இடைக்காலத் தீர்ப்பு வழங்க நடுவர் மன்றத்துக்கு முழு அதிகாரம் உண்டு என்றும் இந்த ஆணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும் அறிவித்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் காவிரி நடுவர் மன்றத்தின் ஆணையை அரசிதழில் மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களிடம் அனைத்துக் கட்சியினருடன் **3.12.91** அன்று முறையிட்டார். அதேநேரத்தில் கர்நாடக மாநிலமும் தன்னுடைய ஆதங்கத்தை **5-11-91** அன்று வெளிப்படுத்தும் வகையில் பாரதப் பிரதமரிடம் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் தமிழ்நாடு அரசு கோரியபடி வெளியிடக் கூடாது என்று வற்புறுத்தியது. இருந்தாலும் இரண்டு மாநிலங்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்த பிரதமர் அவர்கள் உச்சநீதிமன்றத்தின் கருத்தையும் மதித்து அதன்படி **10.12.91** அன்று மத்திய அரசின் அரசிதழில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை வெளியிடச் செய்தார்.

**முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம்**

மத்திய அரசு இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடப்

> **பயமேன் ?**
>
> **நீ**ங்கள் உண்மையானவர்களாகவும், அன்புடையவர்களாகவும், இருந்தால் ஒரு போதும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.
>
> **–சுவாமி விவேகானந்தர்**

பட்ட பின்னரும், 1993-94-ஆம் ஆண்டில், நீர்வரத்து அந்த இடைக்கால ஆணைப்படி நீர் வராததால் வாடிய பயிரின் நலனைக் கருதி காவிரியில் உடனடியாகத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடக அரசை ஆணையிடக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18.7.93 அன்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத் துயில் கொள்ளும் நினைவிடத்தில் உண்ணா நோன்பை மேற் கொண்டார். "தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இன்றி வாடும் பயிர்களைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லை. இப்பொழுது எப்படியாவது காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கோரி நெருக்கடியிலிருந்து விவசாயிகளை மீட்க வேண்டும். எனவே, காவிரிப் பிரச்சினைக் காக இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்கிறேன்" என்று புரட்சித்தலைவி அவர்கள் உண்ணாநோன்பை மேற் கொண்டார். தொடர்ந்து 4 நாட்களாக உண்ணாவிரதத்தை மேற்கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, மாண்புமிகு மத்திய அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா அவர்கள் பாரதப் பிரதமர் சார்பாக நேரில் வந்து காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்ற ஆணையை நிறைவேற்றும் ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்படும் என்று உறுதி மொழியைத் தந்து உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

### கர்நாடகத்தின் கண்மூடித்தனம்

கர்நாடக அரசோ, நடுவர் மன்றத் தீர்ப்பைச் சிறிதும் மதிக்காமல் தொடர்ந்து பிடிவாதமாக நடந்து வருகிறது. இது உச்சநீதிமன்றமும், மத்திய அரசும் அமைத்த நடுவர் மன்ற அமைப்பையே சற்றும் பொருட் படுத்தா நிலையை ஏற்படுத் தியது. இதனால், இந்திய அரசியலமைப்புக் கோட் பாட்டின் அடித்தளத்தையே ஆட்டி வைப்பது போல அதன் நடவடிக்கை உள்ளது. கிட்டத் தட்ட இரண்டரை ஆண்டுகள் ஆகியும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டபடி, நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறைவேற்ற கண்காணிப்புக் குழுவும், அமலாக்கக் குழுவும், மத்திய அரசு அமைக்கவில்லை. இது தவிர, கர்நாடக அரசின் சட்ட விரோதமான செயல்பாடு களையும் மத்திய அரசு தடுக் கவும் இல்லை. இந்தச் சூழ்நிலை யில் வேறுவழியின்றி 11.12.95 அன்று தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது. இது தொடர்பாக நடுவர் மன்றத்தை அணுகும்படி உச்சநீதிமன்றம் தமிழக அரசுக்கு ஆணையிட்டது. பிறகு தமிழக அரசு ஒரு அவசர மனுவை நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்தது. அதன்பேரில் நடுவர் மன்றம் உடனடியாக 11 டி.எம்.சி. தண்ணீருடன் சேர்த்து டிசம்பர் மாதத்திற்குரிய தண்ணீரையும் 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய 2.51 டி.எம்.சி. தண்ணீரையும் வழங்க வேண்டுமென்று தீர்ப்பு கூறியது.

### நடுவர்மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்துக!

நடுவர் மன்றத்தின் இந்தத் தீர்ப்பை உடனடியாகச் செயல் படுத்தி, தண்ணீரைத் திறந்து விடும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி கர்நாடக முதல்வரைக் காவிரியில் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், எந்தவித நடவடிக்கையுமின்றி காலம் தாழ்த்தப்பட்டது.

### நாட்டுக்கே இழப்பு

காவிரியில் தண்ணீர் இல்லாததால், தமிழ்நாட்டில் காவிரி ஆயக்கட்டுப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் காய்ந்து, தீய்ந்து கொண்டிருக் கின்றன. இதனால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு தமிழ்நாட்டுக்கு மட்டு மல்ல, இந்தியாவுக்கே ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றைத் தாக்கல் செய்து நடுவர் மன்றத்தின் தீர்ப்பைச் செயல் படுத்தக் கோரினார். உச்சநீதி மன்றம், பிரச்சினைக்கு 28.12.1995 மாண்புமிகு பாரதப்

பிரதமர் அவர்களை உடனடியாக இரண்டு நாட்களுக்குள் தொடர்புடைய காவிரிப் படுகைப் பகுதி மாநில முதலமைச்சர்களை அழைத்துப் பேசி நடுவர் மன்றம் ஆணையிட்ட 11 டி.எம்.சி. நீரை வழங்க சுமூகமான தீர்வுகாண வேண்டும் என ஆணையிட்டது. எனவே, பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி முதல்வர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

**முதல்வர்கள் கூட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவிரிப் பிரச்சினையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் முறையிடுவதற்கு வசதியாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார். இதில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த 78 உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். இந்தக் குழுவினருடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 31.12.95 அன்று பாரதப் பிரதமர் அவர்களை, புதுடெல்லியில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன்பிறகு, பிரதமர் அவர்கள் இருதரப்புக் கோரிக்கைகளையும் கேட்டறிந்து தமிழ்நாட்டிற்குக் கர்நாடக அரசு உடனடியாக 6 டிஎம்சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். இரு மாநிலங்களிலும் உள்ள அணைகளின் தண்ணீர் அளவு பயிர்களின் நிலைமை பற்றி ஆய்வு நடத்த ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஒய்.கே. அலெக் அவர்கள், ரூக்கி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு பரத் சிங் அவர்கள், மத்தியப் பிரதேச மாநில முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு கேப்ரிகான் அவர்கள் ஆகிய மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படும். இந்தக் குழு பாதிக்கப்பட்ட மாநிலங்களில் அணைகளில் உள்ள தண்ணீர் அளவு நிலுவை பயிர்களின் நிலையை நேரில்பார்த்து தேவையான நீர் அளவு பற்றி 10.1.96-க்குள் அறிக்கையினை அளிக்கும் என்றும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து பிப்ரவரி மாதம் அனைத்து முதலமைச்சர்கள் கொண்ட நீர்வள மேம்பாட்டுக்குழு கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு பல மாநிலங்கள் வழி ஓடும் ஆற்றுநீர் பங்கீடு சம்பந்தமாக குறிக்கோள்களை வகுக்க அனைத்துக் கட்சி கூட்டம் ஆலோசனை நடத்தப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார். மாண்புமிகு பாரதப் பிரதமரின் ஆணைக்குக் கர்நாடக அரசு உடன்படாமல் கண்டனம் தெரிவித்து, உடனடியாகத் தண்ணீரைத் திறந்துவிடத் தாமதித்தது. பின்னர், அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் பிரதமர் அறிவித்த 6 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்துக்கு கர்நாடக அரசு திறந்துவிட்டது.

**நிபுணர்குழு அறிக்கை**

பிரதமர் அவர்கள் அமைத்த நிபுணர் குழு தமிழ்நாடு மற்றும் கர்நாடகக் காவிரிப்படுகைப் பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அதன் அறிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்து உள்ளது.

கிட்டத்தட்ட பல நூற்றாண்டுகளாகக் காவிரிப் பிரச்சினை ஒரு தீராப் பிரச்சினையாக வளர்ந்து தற்போது ஒரு முடிவுக்கு வரும் சூழ்நிலை ஏற்படும் என்றால், அதற்கு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெருமுயற்சியேயாகும். காவிரி நதிநீர்ப் பிரச்சினையை ஏதோ தண்ணீர்ப் பிரச்சினை என்று மேலோட்டமாகக் கணித்துவிட முடியாது. ஏனென்றால், எடுக்கப்படும் எந்த முடிவும் தமிழகத்துப் பாசனப் பகுதியையும், அதன் பொருளாதாரத்தையும் வெகுவாகப்பாதிக்கும் என்பதை மத்திய அரசு இந்த நேரத்திலாவது உணர்ந்து மாநிலங்களுக்கு இடையே நிலவுகிற நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளைஅரசியல்நோக்கோடுபாராமல்பொது மக்கள் நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, நடுவர் மன்றத் தீர்வை அமுல் செய்ய வேண்டும். அதே நேரத்தில் தேசிய அளவிலான ஒரு திட்டத்தை இயற்றி அதன்மூலம் அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கிட வேண்டும். அப்போதாவது ஒவ்வொரு நாளும் நலிந்துகொண்டிருக்கும் காவிரிப் படுகை விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். இது உண்மையிலேயே காவிரிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாகும் என்பதால் தமிழகத்து விவசாயிகள் என்றென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருப்பார்கள் எனலாம்.

**—மா. அசோகன்**

# வருவாய்த்துறை அலுவலர்களுக்கு தொலைத்தொடர்புச் சாதனங்கள் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1994-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், திடீர் வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளின்போதும், மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய, வருவாய்த் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரையும் மற்ற அலுவலர்களையும் தொடர்பு கொண்டு, துயர் துடைப்புப் பணிகள், மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

இவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, இயற்கைச் சீற்றங்களின்போது, மற்ற வகையான தொலைத் தொடர்புச் சாதனங்கள் பழுதடைந்து விடும் நிலையிலும், காவல் துறையினர் பயன்படுத்தும் Micro-Wave தொலைபேசியும் இயங்க முடியாத நிலையிலும், இந்த நவீனத் தொலைத் தொடர்புச் சாதனமான (Very High Frequency Telecommunication System) வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டிருந்தார்.

தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக வருவாய்த்துறை அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள் அந்தந்த மாவட்டத் தலைவர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு துயர்த் துடைப்புப் பணிகளைச் செய்வதற்கு (VHF) Very High Frequency அதி வேக அலைவரிசையில் இயங்கும் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதன் தொடக்கமாக 10.11.1995 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தத் தொலைத் தொடர்புச் சாதனங்களை இயக்கி வைத்தார். ஒரு Walkie Talkie மூலம் சென்னையிலிருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராம மோகன் ராவ் அவர்களுடன் தொடர்பு கொண்டு இந்தத் தொலைத் தொடர்புச் சாதனத்தை இயக்கி வைத்து, மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை ஆற்ற வேண்டும் எனத் தெரிவித்துக் கொண்டார். வருவாய்த் துறை அலுவலர்கள் தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த ஆணையிட்டதற்கு, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பராமரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்களும் இதர அலுவலர்களும் உடனிருந்தார்கள்.

---

**பகுத்தறிவுக்கேற்ற அறவழியில் அமைந்த மதத்தினை ஏற்றுக் கொள்வதே விவேகம்.**

**–டாக்டர் ராதாகிருஷ்ணன்**



மகளிர் முன்னேற்றம்

# தமிழகமே முன்னோடி!

– மாண்புமிகு முதல்வர் –

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப் படுகின்ற தீங்குகளையும், குற்றங்களையும் தடுப்பதற்காகவும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பணிகளை ஆராய்வதற்காகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய தொடக்க உரை (12.12.1995)

எல்லாத் துறைகளிலும், மற்ற மாநிலங்களுக்கு முன் னோடியாக விளங்கும் மாநிலம் நமது தமிழ்நாடு. அதே உணர்வுடன் பெண்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத் திலும், சமுதாயக் கொடுமை களிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் பணியிலும்



தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு இன்று முன்னோடியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகளை எப்படித் தடுப்பது என்பது குறித்தும், பெண்களுக்கு இழைக் கப்படும் குற்றங்களுக்கான சட்டபூர்வமான தீர்வை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், பெண்களின் சமூக உரிமை களைப் பாதுகாத்து, சரிநிகர் சமானமாக அவர்கள் வாழ்வ தற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நாம் விவாதித்து நல்ல முடிவுகளை மேற்கொள்வதற்காக இன்று இங்கே கூடியுள்ளோம்.

ஏட்டிலும், பாட்டிலும், தெய்வங்களாகக் கருதிப் புகழப் படும் பெண்கள் நாட்டிலும் வீட்டிலும், சமுதாயக் கொடுமை களுக்கும், குற்றங்களுக்கும் ஆளாகி அவதிப்படுகிறார்கள் என்பதை, நான் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அறிந்து கொண்டேன். பெண் களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களும், தீமைகளும், சில நேரங்களில் குற்றங்களாகவே கருதப்படாத மனப்பான்மையும், சூழ்நிலையும் நிலவி வந்ததைக் கண்டேன். மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, தீங்கு களுக்கும் குற்றங்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தால்தான், இன்றைய சமுதாயத்தில் நாம் எதிர்பார்க்கும் ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன். தமிழ்நாடுதான், அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டி யாகவும் விளங்க முடியும் என்று எண்ணினேன். அந்த எண்ணங்

களின் பிரதிபலிப்பாக, கடந்த நான்கரை ஆண்டுக் காலமாக, எங்கள் அரசு ஒரு "மகளிர் நல அரசாக பெண்கள் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதில் ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில் நான் பெருமிதம் அடைகிறேன்.

எங்கள் அரசு பெண்களின் ஒட்டு மொத்த சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூகத்தில் அவர்களுக்கு உரிய பங்கினையும், உரிமைகளையும் பெற்றுத் தந்திடவும் பெண்களுக்கு என ஒரு தனி கொள்கையை அறிவித்தது. காவல் மாவட்டந்தோறும், குறைந்தது ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற அளவில் தொடங்கி இன்று 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எங்கள் அரசு, மாநிலப் பெண்கள் குழுமத்தை (State Womens Commission)-ஐயும் ஏற்படுத்தியது. பெண் சிசு வதையைத் தடுக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தையும், பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும், பெண்கள் கல்வியை ஊக்குவிக்க, பல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

ஆண்டாண்டுக் காலமாகவே பெண்களுக்குச் சமுதாயத்தில் கொடுமைகள் இழைக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் வருகின்றன. பெண்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப் படாமலேயே இருந்து வந்ததோடு, எங்களுக்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் எவரும் இந்தப் பிரச்சினையை அணுகி தீர்வு காண முற்படவில்லை.

இந்தியா விடுதலை அடைந்த பின்பு, மகளிரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டில் சிறிது முன்னேற்றம் தென்பட்டாலும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளும், குற்றங்களும் முற்றிலுமாக நின்றுவிட்டன என்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படவில்லை.

பல நேரங்களில் பெண்களுக்கு அவர்கள் இல்லங்களில், கணவராலும், கணவரது வீட்டாராலும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளும், அநீதிகளும், குற்றங்களாகவே இந்தச் சமுதாயத்தால் கருதப் படாத ஒரு மனப்பான்மையும், குற்றங்களாக அங்கீகரிக்கப் படாத ஒரு சூழ்நிலையும் இருந்து வருகின்றது. நமது பாரம்பரிய மிக்க பண்பாட்டின் ஆணி வேரான குடும்பம் என்கின்ற அமைப்பு, அன்பு, பாசம் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளதால், இந்த அமைப்பிற்குச் சற்றும் குந்தகம் ஏற்படாமல், பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், கொடுமைகளையும் களைந்து, குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்துடனும், சட்டரீதியாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெற்றுத் தரவும், அவர்களது பிரச்சினைகளை அந்தரங்கமாக மனம் விட்டு எடுத்துரைத்து ஆலோசனைப் பெற்றுத் தீர்வு காணவும் ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும் என்று உறுதியாகக் கருதினேன். அந்த உறுதியின் வெளிப்பாடு தான் இன்று அனைவரின் பாராட்டுதல்களோடு செயல் பட்டு வரும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்'.

1992-ஆம் ஆண்டு, முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைச் சென்னையில் நான் துவக்கி வைத்தபோது, இந்த அமைப்பு, சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நல்ல விளைவுகளை உண்டாக்கும் என்று உறுதியாக நம்பினேன். நான் எதிர் பார்த்ததைப் போலவே, ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலேயே, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், பொதுமக்களிடையே குறிப்பாக, மகளிரிடையே அமோகமான வரவேற்பைப் பெற்றது. எனவே இத்திட்டத்தை நான் விரிவுபடுத்தினேன். இன்று தமிழகத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

---

**உழைப்பே உயர்வு**

கடுமையான உழைப்பு வசதியையும் நன்மதிப்பையும் பெற்றுத் தரும்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

விருப்பங்கள் வளர வளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்.

—பிளாட்டோ

---

அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, முதல் முதலாகத் தொடக்கிய பெருமையும், மற்ற மாநிலங்களுக்கு, ஏன் சில அயல் நாடுகளுக்குக் கூட இந்த விஷயத்தில் ஒரு முன்னோடியாக விளங்குகின்ற சிறப்பும் நிச்சயமாகத் தமிழ்நாட்டிற்கு, என்றென்றும் சரித்திரத்தில் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 47,158 மனுக்களைப் பெண்களிடமிருந்து பெற்று அவர்களின் குறைகளைப் பெருமளவு தீர்த்துள்ளன. 1,268 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 14,883 மனுக்களில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு, பெண்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப் பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகள் இல்லாமல் இருந்திருந்தால், இந்த அளவுக்குப் பெண்கள் துணிவுடன் முன் வந்து தங்களது பிரச்சினைகளை ஆண் காவலர்களுடன் பகிர்ந்துகொண்டிருப்பார்களா என்றால், அது கேள்விக்குரிய ஒரு விஷயமே! பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட, தீமைகளையும், குற்றங்களையும் ஒரு குற்ற மனப்பான்மை இன்றி, அந்தரங்கமாக எடுத்துரைத்து, தீர்வு காண ஒரு அமைப்பு இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே அவர்களுக்கு ஒரு துணிவையும், Moral Support-ஐயும் தரும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமின்றி, பெண்களுக்கு எதிராகக் கொடுமைகளைப் புரிகின்றவர்களும், தங்களது பாவச் செயல்களிலிருந்து இனி எளிதில் தப்பிவிட முடியாது என்ற உணர்வையும், சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப்படுவோம் என்ற பய உணர்வையும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தி இருப்பது, நமது இறுதி இலக்கிற்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும். எனவேதான், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாட்டை நேரிடையாகக் களப் பணிகளில் ஈடுபட்டுள்ள காவல் துறைப் பெண் ஆய்வாளர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளவும், மகளிருக்கு எதிராக இழைக்கப் படுகின்ற குற்றங்களைக் களைவதற்காக, தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டு வருகின்ற, மாநிலப் பெண்கள் குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் சீரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறியவும் இந்தக் கூட்டத்திற்கு நான் ஏற்பாடு செய்தேன்.

மற்ற காவல் நிலயங்களைப் போல் அல்லாமல், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பெண்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளை எந்த வகைகளில் அணுகித் தீர்வு கண்டு சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும் என்பது குறித்தும், அரசின் இலட்சியங்களைச் செயல்படுத்தக்கொண்டு வர வேண்டிய, சட்டத் திருத்தங்கள் குறித்தும், விதிமுறை மாற்றங்கள் குறித்தும் உங்களது கருத்துக்களை இங்கே தெரிவிக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நாம் மேற்கொண்டுள்ள இந்த விவாதம் புதிய சிந்தனைகளுக்கும், நல்ல முடிவுகளுக்கும் வழி வகுக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புதிய சிந்தனைகள் தமிழக மகளிரின் விரைந்த முன்னேற்றத்திற்கும், நாம் கற்பனை செய்து கொண்டிருக்கும் ஒரு இலட்சிய சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும் உறுதுணையாக விளங்கும் என்று நம்புகிறேன்.

பெண் காவலர்களின் பணி சற்று வித்தியாசமானது. மனுதாரர்களை, ஒரு சகோதர உணர்வுடன் நடத்தி, சட்டப் பூர்வமான நடவடிக்கையை எடுப்பதோடு அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், வழங்க வேண்டி உள்ளதால், பெண் காவலர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முறையில், சில மாறுதல்களைக் கொண்டு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மட்டுமின்றி, தீங்கிழைக்கப்பட்ட பெண்களுக்கு உள்ளத்தாலும்

---

**ஒழுக்கமில்லாத** வீரம் ஒருவனைக் கோழையாக்கி விடுகிறது.

**—பிளாட்டோ**

**உண்மையாக** இருந்தாலும் பிறர் உள்ளம் வருந்துமாறு எதையும் சொல்லாதீர்கள்

**—சாரதா தேவியார்**

---

உடலாலும் ஏற்படும் பாதிப்பு களிலிருந்து அவர்களைக் காப் பாற்றி அவர்களின் நல் வாழ்விற்குத் தேவைப்படும் ஆலோசனைகளைத் தெரி விக்கும் Counselling பணியையும் பெண் காவலர்கள்; மேற் கொள்ள வேண்டி இருப்பதால், அதற்கான பயிற்சியையும், புதிய அணுகுமுறைகளையும் பெண் காவலர்களுக்கு நாம் அளிக்க வேண்டும். சிறந்த பயிற்சியும், புதிய அணுகுமுறைகளும் நமது பெண் காவலர்களின் பணியை மேலும் சிறப்படையச் செய்யும் என்பதோடு, அதனால் இரட்டிப்புப் பலன் இந்தச் சமுதாயத்திற்கும், மகளிருக்கும் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எனவே, இது குறித்தும் உங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரி விக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தாங்கள் பெற்ற அனுபவத்தையும், அரசின் எண்ணங்களைச்சீரிய முறையில் செயல்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் பெண் ஆய்வாளர்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மாநிலப் பெண்கள் கமிஷன்" Statte Womens Commission தமிழக மக்களின் பிரச்சினைகளைப் புதிய கோணத்துடன் அணுகி, அவர் களுக்கு இழைக்கப்படும் குற்றங் களைத் தடுக்க மேற்கொண்டு வரும் நற்பணிக்கு எனது மனங்கனிந்த பாராட்டுதல்களை, முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். 'மாநிலப் பெண்கள் கமிஷனின் முதல் இடைநிலை அறிக்கை' இன்று வழங்கப்படுவதை அறிந்து, நர்ன் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் மேற்கொண்டு வரும் பணி களைப் பற்றியும் அவர்களிட மிருந்து அறிந்து கொள்வதில் ஆர்வமாக உள்ளேன்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற நிகழ்வு களை எப்படி படிப்படியாகக் குறைப்பது என்பது குறித்தும் அத்தகைய குற்ற நிகழ்வுகள் மீது வழக்குப் பதிவு செய்து விரைவில் புலன் விசாரணையை முடித்து தண்டனை பெற்றுத் தருவது எப்படி என்பது குறித்தும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குச் சென்றால், தீர்வு ஏற்படும் என்ற நம்பிக் கையைப் பெண்கள் மனதில் ஏற்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தை விபச்சாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தவும், கையில் குழந்தைகளுடன், ஆதரவற்ற நிலையில் கணவனால் கைவிடப்படும் பெண்கள் அதாவது Deserted Women சமுதாயத்தில் எதிர் நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், Dowry கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சமுதாயக் கேடு, ஒரு மாபெரும் பாவம் என்ற எண்ணத்தைச் சமுதாயத் தில் ஆழமாகப் பதிய வைக்கவும் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும், மாநிலப் பெண்கள் கமிஷன் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலப் பெண்கள் கமிஷனின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய அவர் களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் தமிழக அரசு வழங்க எப்போதும் தயாராக உள்ளது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

பெண்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்க வேண்டிய, மாபெரும் சமுதாயப் பொறுப்பு நமக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டுள்ளேன். அந்த இலட்சியப் பணியில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பங்கினை ஆய்வு செய்து அவர்களது பணிக்கு ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்துவதோடு உங்கள் மேலான கருத்துக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

**எது கடவுள் நெறி?**

நல்லொழுக்கம், நற்செயல், நற்சாட்சி இவையே கடவுள் நெறியாகும்.

**—சத்திய சாயிபாபா**

**இலட்சிய வாழ்க்கை**

வாழ்க்கையில் ஒரு இலட்சியம் வேண்டும். இலட்சியம் இல்லாத மனிதன் விலங்குக்குச் சமம்.

**—கிருபானந்த வாரியார்.**

# 50 இலட்சம் ரூபாயில்
# தமிழ்நாடு விவசாயிகள் மேம்பாட்டு நலநிதி

இந்த ஆண்டு சுதந்திரத் தினத்தன்று சென்னை கோட்டைக் கொத்தளத்திலிருந்து சுதந்திர தின விழா சிறப்புரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு, அவர்கள் விபத்தில் இறந்தாலோ, உடல் ஊனமுற்றாலோ 25,000 ரூபாய் நிவாரண உதவித்தொகை (Financial Relief) வழங்கும் விவசாயிகள் இலவச ஈட்டுறுதித்திட்டம் (Accident Free Insurance Scheme for Agriculturists) ஒன்று செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான விதிமுறைகளை வகுத்து இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் 18 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய விவசாய விளை பொருள்களைக் குறைந்தபட்சம் ஒரு டன் ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு விவசாய விளை பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் (TamilNadu Agricultural Marketing Society) மூலமாக விற்பனை செய்திருக்க வேண்டும். 65 வயது அடைகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், நிவாரண உதவித்தொகையாக வழங்குகின்ற ஒரு திட்டமாகவும் விரிவுபடுத்துவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் குழுவால் செயல்படுத்தப்படும். இந்தக் குழுவில் மாநில விவசாய விளை பொருள்கள் வாரியத்தின் தலைவர், விவசாய விளை பொருள்கள் விற்பனைச் சங்கங்களின் இயக்குநர், அரசு நிதித்துறைச் செயலாளர், விவசாயத்துறைச்செயலாளர் ஆகியோர் இடம் பெறுவார்கள். மாநில விவசாய விளை பொருள்கள் வாரியத் திலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த, 50,00,000 ரூபாயைக் கொண்ட ஒரு நிதி (Tamil nadu Farmers Development and Welfare Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

---

**மேன்மைக்கு வழி**

வெட்கம், வெறுப்பு, அச்சம் ஆகியவற்றுக்கு ஆளாகிறவன், ஒரு போதும் மேன்மை அடைவதில்லை.

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

**உலக அமைதி**

உலகப் பற்றுக் குறைய குறைய மனதில் அமைதி வளரும்.

—சாரதா தேவியார்

**வெற்றிக்கு வழி**

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகியவை வெற்றிக்கு இன்றியமையாதது.

—சுவாமி விவேகானந்தர்



தமிழகத்தின் சரித்திரத்தில் மட்டுமின்றி, இந்தியச் சரித்திரத்திலேயே, தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ள நகரம், இந்த வேலூர் நகரம். சரித்திரச் சிறப்பு மிக்க, இந்தக் கோட்டை வெளி மைதானத்தில், நடைபெறுகின்ற எழுச்சி மிக்க, சத்துணவு அமைப்பாளர்களின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தக் கோட்டையிலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், இன்று வரலாற்றில் சிறப்பு பெற்று விளங்குவதைப் போல கோட்டை வெளி மைதானத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மாபெரும் விழா, எதிர்கால வரலாற்றில் ஒரு நினைவுகூரத்தக்க நிகழ்ச்சியாக உருவாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் அன்புச் சகோதரியின்



பிள்ளைமலர்களின் பசிபோக்கும் புனிதப்பணி

# சத்துணவுப்பணி சமுதாயப் பொறுப்புள்ள சமூக நலப்பணி என்றுணர்ந்து செயல்படுக!

**6.12.1995 அன்று வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய விழாச் சிறப்புரை**

தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதோடு, அரசு ஊழியர்களின் பிரச்சினைகளையும் தாயுள்ளத்தோடு அணுகி அவற்றிற்குத் தீர்வு கண்டு வருகிறது. இந்தப் பேருண்மையை விளக்கும் வகையில், இன்றைய நிகழ்ச்சி அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

இந்த மாநாட்டினைச் சிறப்பாக ஏற்பாடு செய்ததோடு வேலூரில் எனக்கு நீங்கள் அளித்த மாபெரும் வரவேற்பையும், அதன் பின்னணியில் அமைந்துள்ள உங்களது அன்பையும் பாசத்தையும் எண்ணி, நான் உண்மையில் பெருமிதம் அடைகின்றேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரும், எத்தகைய ஒரு சமதர்ம, சமத்துவச் சமுதாயத்தைப் படைக்க



வேண்டும் என்று விரும்பினார்களோ, சட்டமேதை பாபா சாஹேப் அண்ணல் டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று எத்தகையதொரு சமூக, பொருளாதார சுதந்திரத்தை அடைந்து நல்வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்களோ அத்தகைய ஒரு அருமையான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, கடந்த நான்கரை ஆண்டுகளாக, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாளான இன்று, அவரது பெயரால் அமைந்துள்ள இந்த மாவட்டத்தில், மாபெரும் மக்கள் நலத் திட்டமாம் சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களின் மாநில மாநாடு நடைபெறுவது சிறப்பிற்குரியதாகும். தாழ்த்தப்பட்ட மக்கள், நலிவடைந்தோர் ஏழை, எளிய மக்கள், ஆகியோரின் நலன் காக்க நாங்கள் நிறைவேற்றி வரும் சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இது மக்கள் நல அரசு; மகளிர் முன்னேற்ற அரசு; மக்களின் எண்ணங்களையும், தேவைகளையும் ஆராய்ந்து, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" நன்மைகளை வழங்குகின்ற ஒரு அன்புச் சகோதரியின் அரசு.

**ந**ாகரிகங்களுக்கு ஆதாரமாக இருப்பது இயந்திரங்கள் அல்ல. பண்புகளே! நாகரிகத்தை இயக்கும் சக்தி உள்ளிருந்து எழும் அக உணர்வுகளே.

**–டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்**

ஒரு நாடு நலம் பெற வேண்டும் என்றால், அந்த நாட்டின் மனித வளத்தை நாம் மேம்படுத்தியாக வேண்டும்.

"தனி ஒருவனுக்கு உணவிலை எனில்,
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று மகாகவி பாரதி முழங்கிய சங்கநாதத்தை, மதிய சத்துணவுத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தின் மூலம், பரிட்சார்த்தமாக நடைமுறைப்படுத்திக் காட்டியவர், எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், மனித வளத்தினால் நியாயமான பலன்கள் கிடைக்க வேண்டுமென்றால், மனித நேயத்தையும் வளர்த்தாக வேண்டும் என்பதையும் அவர் நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

மலர்ந்து பூத்துக் குலுங்க வேண்டிய குழந்தை மலர்கள், பசியின் கொடுமையால் வாடி வதங்கக் கூடாது என்ற சமுதாய நல்லெண்ணம், வயிற்றுப் பசியால் அவர்கள் துன்புற்று, அறிவுப் பசியை தணித்துக் கொள்ளும் நல்ல வாய்ப்புகளை இழந்து விடக் கூடாது என்ற மனித நேயக் கோட்பாடு, ஆகியவற்றின் தீர்க்கமான வெளிப்பாடுதான், ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி ரூபாய் செலவில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வரும், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம்" ஆகும்.

இந்த சத்துணவுத் திட்டம் என்றால், எனக்கு ஒரு தனிப்பட்ட ஈடுபாடும், ஏன் - ஒரு Sentimental attachment-ம் உண்டு. ஏனென்றால், எனது பொது வாழ்க்கை தொடக்கத்திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு.

1982-ஆம் ஆண்டில், நான் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தேன். அதே ஆண்டு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், மதிய சத்துணவுத் திட்டத்தை தொடங்கினார்கள். எனது பொது வாழ்க்கையில், நான் வகித்த முதல் பதவி, சத்துணவுத் திட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் பதவியாகும். பின்னர், நான் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆனேன்; நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன்; சட்டமன்ற உறுப்பினராகி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகச் செயலாற்றினேன். இன்று கழகப் பொதுச் செயலாளராகவும், தமிழக முதலமைச்சராகவும், மக்கட் பணியாற்றி வந்தாலும் எனது பொது வாழ்க்கையின், முதல் படியாக இருந்த சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் பதவியை, நான் என்றைக்குமே மறந்தது இல்லை. நான் கட்சியிலும், அரசாங்கத்திலும் எந்த ஒரு பதவியையும் வகிப்பதற்கு முன்பே, மக்கள்

நலப் பணிகளில், என்னை முழுமையாக ஈடுபடுத்திட, வழி வகுத்த காரணத்தினால், சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவில் பணியாற்றியதை நான் ஒரு பெருமிதத்துடன் இன்றும் நினைத்து மகிழ்வது உண்டு.

நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணி, சாதாரண அரசுப் பணி மட்டும் அல்ல! அது ஒரு சமுதாய நற்பணி! வளரும் தலைமுறையினருக்கு ஒரு தாயுணர்வுடன் அமுது படைத்து அவர்கள் வயிறார உண்டு மகிழ்வதைக் கண்டு, மனநிறைவு அடையும் மனிதத் தன்மை மிக்க மகத்தான பணி! அந்தச் சமுதாய உணர்வு சற்றும் குன்றாமல் நீங்கள் தொடர்ந்து ஒரு புதிய முனைப்புடன், உங்கள் பணி களை ஒரு தொண்டு உள்ளத் துடன் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, பெண்கள் முன்னேற்றத்திற்கெனக் கொள்கை ஒன்றையும் குழந்தைகள் மற்றும் மகளிர் நலன் காக்க 15 அம்சத் திட்டத்தையும், பெண் சிசு வதையைத் தடுக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தையும், பெண் குழந்தைகளின் வாழ்வில், புதிய வசந்தத்தை ஏற்படுத்த, "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும்" தீட்டி முனைப் புடன் செயல்படுத்தி வருகின்றது.

உடல் ஊனமுற்றோரின் நலன் காக்க, நாங்கள் ஒரு புதிய கொள்கையை அறிவித்தோம். அந்தக் கொள்கையைச் செயல் படுத்த, ஊனமுற்றோர் நலத் துறை ஒன்றையும் ஏற்படுத் தினோம். சமுதாயக் கொடுமை களிலிருந்து மகளிரைக் காப்பாற்ற, மாநிலம் முழுவதும் இன்று, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. மாநிலப் பெண்கள் நலக் குழுமமும், முழுவதும் பெண் களாலேயே நடத்தப்படும் நியாய விலைக் கடைகளும் இன்று இந்தியத் துணைக் கண்டத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

கருவுற்ற மகளிருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை, எங்கள் ஆட்சிக் காலத்தில் 200 ரூபாயிலிருந்து, 300 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகையை அதிகமானோருக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், ஓய்வூதியத் தொகையை இரண்டு மடங்காக்கி, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கும் திட்டத்தையும் அமல்படுத்தினோம்.

நலத் திட்டங்களின் பயன்கள், மக்களுக்குச் சென்றடைய, முனைப்புடன் செயல்படுகின்ற, அரசுப் பணியாளர்களின் நலனை, ஒரு தாயுணர்வுடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு பாதுகாத்து வருகின்றது. இன்று தமிழக அரசில் பணி யாற்றி வரும், 12.23 லட்சம் பணியாளர்களில், 22.8 சத வீதத்தினர், அதாவது 2.7 லட்சம் பேர், சத்துணவுத் திட்டத்தில், பணி புரிந்து வருகின்றார்கள் என்பதிலிருந்து, இத்திட்டத்தில் நாங்கள் செலுத்தி வரும் அக்கறை தெளிவாகும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவுத் துறையில், நியாய விலைக் கடைகளில் தொகுப் பூதியம் பெற்று பணியாற்றி வந்த பணியாளர்களில் 5 ஆண்டு களுக்குமேல் பணி புரிந்த, 7500க்கும் மேற்பட்ட பணி யாளர்களுக்கு, ஊதிய விகிதம் அதாவது Time Scale நிர்ணயம் செய்து, ஊதியம் வழங்கி யுள்ளோம். பல்வேறு பிரிவு களைச் சேர்ந்த, அரசுப் பணி யாளர்களுக்குப் பல புதிய சலுகைகள், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் அதிகம், தொகுப் பூதியம் பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு, இன்று ஆண் டொன்றுக்கு 20 ரூபாய் ஊதிய உயர்வும், 150 ரூபாய்க்கும் குறைவாக தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் 10 ரூபாயும், கடந்த நாலரை ஆண்டு காலக் கட்டத்தில், 5 முறை வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு ஊழியர்களுக்கு இடைக் கால நிவாரணம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்ட போதெல்லாம், தொகுப்பூதியம் பெறுகின்ற சத்துணவுப் பணியாளர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

---

**பகவானை வசப்படுத்த...**

பக்தியாலும், ஞானத்தாலும் பகவானை நம் வசப்படுத்த முடியும்.

**—ராமகிருஷ்ண பரமஹம்சர்**

---

**உழைப்பே உயர்வு**

அரிய காரியங்கள் எதுவும் உழைப்பின்றி ஒருபோதும் நிறைவேறாது.

**–சுவாமி விவேகானந்தர்**

மாதம் ஒன்றுக்கு, 500 ரூபாய் தொகுப்பூதியம் பெறுகின்ற வர்களுக்கு, 1994 மற்றும் 1995 ஆகிய இரண்டு ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு 40 ரூபாய் வீதம், மொத்தம் 80 ரூபாயும்; 500 ரூபாய்க்கும் குறைவாகத் தொகுப்பூதியம் பெறுகின்றவர் களுக்கு, ஆண்டொன்றுக்கு 25 ரூபாய் வீதம், மொத்தம் 50 ரூபாயும் வழங்கி மகிழ்ந் துள்ளோம்.

சத்துணவுத்திட்டத்தினை, ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், சமுதாய நற்பணியாக மேற் கொண்டு வரும், சத்துணவு மற்றும் குழந்தை நல அமைப் பாளர்களது மனம் குளிர, சில புதிய அறிவிப்புகளை இங்கே வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு ஊதியம் பெற்று வரும் சத்துணவு அமைப் பாளர்கள் தங்களுக்கு ஊதிய விகிதம் அளித்து, ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு, அதாவது, Annual increment பெறும் முறையை, நடைமுறைப் படுத்த வேண்டும் என்று பல காலமாகக் கோரி வருகிறார்கள். அந்தக் கோரிக்கை இன்று என்னால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 13 ஆண்டுகளாகத் தொகுப்பூதியம் மட்டுமே பெற்று வந்த, சத்துணவு அமைப்பாளர் களுக்கும், மற்றும் குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கும், வரும் புத்தாண்டு முதல், ஊதிய விகிதத்தில், அதாவது, Time Scale-ல், ஊதியம் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 200 ரூபாயிலிருந்து தொடங்கி, 400 ரூபாயில் முடியும், ஒரு புதிய ஊதிய விகிதத்தில், சத்துணவு அமைப்பாளர்களுக்கு, ஊதியம் நிர்ணயம் செய்யப்படும். இந்த புதிய ஊதிய விகிதம், நடைமுறைப் படுத்தப்படும்போது, சத்துணவு அமைப்பாளர்களுக்கு, 40 ரூபாயிலிருந்து 110 ரூபாய் வரை, உடனடியாகக் கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப் பினால் அரசுக்கு, 8 கோடி ரூபாயிலிருந்து, 9 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவினம் ஏற்படும் என்றாலும், ஒரு லட்சம் சத்துணவு அமைப்பாளர்கள் இதனால் பயன்பெறுவார்கள் என்பதை எண்ணும்போது இந்தக்கூடுதல் நிதிச்சுமை எங்களுக்கு நிச்சயமாக ஒரு பாரமாகத் தெரியவில்லை.

தற்போது, சத்துணவு வழங்கப்படும் ஒவ்வொரு வருக்கும் காய்கறி, மற்றும் இதரபொருட்களை வாங்கு வதற்காக 13 காசுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. சத்துணவில் கூடுதலாகக் காய்கறிகளையும், கீரைகளையும் சேர்க்க வேண்டும் என்பதற் காகக் காய்கறி மற்றும் இதரப் பொருட்களுக்கான செலவினத் தொகை, நபர் ஒன்றுக்கு 13 காசிலிருந்து, 18 காசாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஒவ்வொரு ஆண்டுக்கும், 15 கோடி ரூபாய் அளவில், கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற் பட்டாலும், இலட்சக்கணக்கான குழந்தைகளின், ஆரோக்கிய மான எதிர்காலத்திற்கு இது வழி வகுக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

எல்லா சத்துணவு மையங் களுக்கும் சொந்தக் கட்டடங் களை ஏற்படுத்தித்தருவதில், எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. சத்துணவு மையங் களுக்கு, புதிய கட்டங்களைக் கட்டுவதற்னெத் தனியே, 5 கோடி ரூபாய் நிதி, ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும், இதற்கான அரசாணை விரைவில் வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீரும், முழுமையான சுகாதார வசதிகளும், எல்லா சத்துணவு மையங்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். எனவே, எல்லாச் சத்துணவு மையங் களுக்கும், படிப்படியாக இந்த வசதிகள் ஒரு நான்காண்டுக் காலகட்டத்தில் ஏற்படுத்தித்தர, ஒரு சிறப்புத்திட்டத்தை, அரசு விரைவில் செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982-ஆம் ஆண்டு, சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது, அதன் செலவினம், ஆண்டுக்கு

100 கோடி ரூபாய் மட்டுமே. 10 வருடங்களுக்குப்பின்பு, 1992-ஆம் ஆண்டு, எங்கள் ஆட்சிக் காலத்தில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டை நாங்கள், 200 கோடி ரூபாயாக உயர்த்தினோம். சத்துணவுத்திட்ட விரிவாக்கத்தின் விளைவாக, இந்தச் செலவினம் கடந்த நான்கு ஆண்டுகளில், இரண்டு மடங்காகியுள்ளது. அதாவது 400 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற கர்ப்பிணிப் பெண்கள், கூடுதலாக ஊட்டச் சத்து பெறவும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஊதியக் குறைவைச் சமாளிக்கவும், மாதம் ஒன்றுக்கு, 75 ரூபாய் வீதம், 4 மாதங்களுக்கு 300 ரூபாய் வழங்கி வருகின்றோம். இந்த ஊட்டச்சத்து நிதி உதவித்திட்டத்தின் கீழ் 2 இலட்சம் கர்ப்பிணிப்பெண்கள், தற்போது பயன் பெற்று வருகின்றார்கள். ஆனால், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு சில நேரங்களில் சரியான உணவு கூட கிடைக்காத சூழ்நிலைகள் இருந்து வருவதால், இனி அந்தக்குறையைப் போக்க, 2 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், இன்று முதல், சத்துணவு வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகச் சமுதாய நல நோக்குடன் பாடுபட்ட, அண்ணல் B.R.அம்பேத்கார் அவர்களின் நினைவு நாளையொட்டி, அரசு நிதி உதவி பெறும் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் சத்துணவு வழங்கும் திட்டம், இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த, 4 கோடியே 12 இலட்சம் ரூபாய், தமிழக அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும் என்றாலும், எனது அன்பிற்குரிய சகோதரிகளின் நல்வாழ்விற்கும், உடல் நலத்திற்கும் இது வழி வகுக்கும் என்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறையில், காவலர்களாகப் பணி நியமனம் பெற குறைந்தபட்ச உயர அளவு, 168 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், பல நேரங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்கள் அதிக அளவில், காவல் துறையில் பணி பெறுகின்ற வாய்ப்பினை இழக்க வேண்டி உள்ளது என்பது எனக்குத் தெரிய வந்துள்ளது. இந்த குறையைப் போக்கிடவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள், அதிக அளவில் காவல் துறையில் நியமனம் பெற வழி வகுக்கவும், காவல் நியமன விதிகளில் தக்க மாறுதல்கள் செய்யப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு, இந்தக் குறைந்தபட்ச உயரத்தின் அளவு, 168 சென்டி மீட்டர் என்பதை 3 சென்டி மீட்டருக்குக் குறைத்து, 165 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்படும்

**அ**றிவைத் தனியாக இருந்து உயர்த்திக் கொள்ளலாம். ஆனால், குணத்தை மக்களோடு பழகித்தான் அமைத்துக்கொள்ள வேண்டும்.

**—கதே**

**இ**யற்கை ஒரு பணியை ஆற்ற வேண்டியுள்ளபோது அதைச் செய்துமுடிக்க ஒரு மேதையைப் படைக்கிறது.

**—ரால்ப் எமர்ஸன்**

**சி**றந்த மனிதன் என்பவன் சொற்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவான்; நடத்தையில் உறுதியாக இருப்பான்.

**—கன்பூசியஸ்**

**மு**யற்சி எல்லா வேளைகளிலும் இன்பம் பயப்பதில்லை. ஆனால், முயற்சி இன்றி இன்பம் ஒரு போதும் பிறப்பதில்லை.

**—பெஞ்சமின் டிஸ்ரேலி**

# ரூ.18 இலட்சம் செலவில் நவீன வேளாண் உத்தி

குறிப்பிட்ட பயிர் வகைகளுக்குத் தேவைப்படுகின்ற சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் ஈரப்பதத்தைக் குறிப்பிட்ட பயிர் வகைகள் தக்க வைத்துக் கொள்வதற்காக அவற்றின் மீது பிளாஸ்டிக் தாள்களைப் போர்த்துதல் ஆகிய நவீன வேளாண் உத்திகளைத் தமிழக விவசாயிகளிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கொண்ட பயிர் வகைகள் பயிரிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 380 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பயிர் வகைகள் மீது போர்த்தப்படுகின்ற பிளாஸ்டிக் தாள்களை வாங்கிப் பயன்படுத்துவதற்காக 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் இந்த நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

---

என்பதையும், இனி 165 சென்டி மீட்டர் அதாவது ஐந்தரை அடி உயரம் இருந்தாலேயே, அவர்கள் காவல் துறையில் பணி புரிய வழி வகை செய்யப்படும் என்பதையும், டாக்டர் அம்பேத்கர் அவர்களின், நினைவு நாளான இன்று இந்த வேலூர்க் கோட்டையிலிருந்து அறிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நிச்சயமாக இந்த அறிவிப்பு, சமூக நீதியை நிலை நாட்ட உதவிகரமாக விளங்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள் மாநில மாநாட்டினை, இத்தனை பிரம்மாண்டமான முறையில், சீரோடும், சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு சமூக நலம், கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர், புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், சத்துணவு அமைப்பாளர்களின் சங்கங்களுக்கும், மாநிலத்தின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் வந்து, இங்குப் பெருந்திரளாகக் குழுமி உள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கும், எனது இதயங்கனிந்த பாராட்டுதல்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் உரித்தாக்கிக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் ஊழியர்கள் அனைவரும், இதனை ஏதோ ஒரு பணி என்று கருதாமல், தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மாபெரும் சமுதாயப் பொறுப்பு, என்பதை உணர்ந்து இதனை ஒரு சமூக நலப் பணியாகக் கருதி, பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுப் பணியாளர்களின் தேவைகளை, ஒரு தாயுணர்வுடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, நிறைவேற்றித்தர என்றென்றும் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய் இந்த விழா, சத்துணவுத்திட்டச் சரித்திரத்தில், ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன். நீங்கள் அனைவரும் எல்லா நலனும், எல்லா வளமும் பெற்று, பெருவாழ்வு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்துகிறேன். *

## நூல் நயம்

### தமிழில் கதைப் பாடல்

ஆசிரியர் :
டாக்டர் அ.நா. பெருமாள்

வெளியீடு :
உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,
தரமணி, சென்னை 113.

பக் : 280 விலை : ரூ 25

நாட்டுப்புற மக்களின் நாவிலே தவழ்ந்து, காற்றிலே கலந்து, காதிலே ஒலிப்பது தான் கதைப் பாடல்கள். எளிமை இதன் இலக்கணம், இனிமை இதன் சுபாவம். சமுதாய வீதிகளில் நடமாடும் மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டும் இந்தக் கதைப் பாடல்களின் அமைப்பு மற்றும் கதைப் பின்னல் முறைகளை அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

மனித வாழ்வில் நேரிடும் சிக்கல்கள் சீர்கேடுகளை எடுத்துக் காட்டும் கதைப் பாடல்களைக் கோடிட்டுக் காட்டி, 'கணவனே பெண்களின் வாழ்வுக்கு உயிர்' என்று சொல்லாமல் சொல்லும் சொல்லோவியங்களையும் சுட்டிக் காட்டுகின்றார் நூலாசிரியர். வாழ்ந்து இறந்தவர்களின் வணக்கமாக விளங்குவன இந்தக் கதைப் பாடல்கள். ஒழுக்கத்தை உயிருக்கும் மேலாக மதித்துள்ள சமுதாய நிலையைக் காட்டுவன இந்தக் கதைப் பாடல்கள். இவற்றையெல்லாம் அழகுறப் பகுத்தும் தொகுத்தும் கூறுகிறது இந்நூல். தமிழ் ஆர்வலர், ஆராய்ச்சி மாணவர்க்கு இந்நூல் மிகச் சிறந்த கையேடு.

—பி.வி.கிரி

### புதுயுகத் துறவியின் புரட்சிக் கர்ஜனை

ஆசிரியர்: தனஞ்ஜெய சாரதி

வெளியீடு: வாணி லட்சுமி
பதிப்பகம்,
118, சல்லிவன் வீதி
கோவை - 1

பக்கம்: 150 விலை: ரூ.20

அமெரிக்க நாட்டுச் சிகாகோவில் முன்னர் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள் சரித்திரச் சிறப்பு மிக்கவை. அவருடைய அந்தச் சொற்பொழிவு இந்தியாவின் ஆங்கில ஏகாதிபத்திய ஆணவத்தை எடுத்துக்காட்டுவதாகவும், அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்கள் எழுச்சிபெறச் செய்வதாகவும், மொத்தத்தில் மனிதாபிமானத்தின் மொத்தப் படப்பிடிப்பாகவும் விளங்குகிறது.

விவேகானந்தரின் சொற்பொழிவு ஆங்கிலத்தில் நூல் வடிவில் வெளிவந்தது; அதன் முக்கியப் பகுதிகளின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்த நூல். ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குப்பின் இந்த நூல் வெளிவந்த போதிலும் கூட, எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய கருத்துகள் இதில் மிகுந்துள்ளன.

எல்லாத் தரப்பினரும், எந்த வயதினரும் படித்துப் பக்குவப் படலாம்.

—முடிகொண்டான்

### உள்மனப் பூக்கள்

ஆசிரியர்: க.அ. பிரகாசம்

வெளியீடு: பைந்தமிழ்ப் பதிப்பகம்,
21, காங்கேயம் சாலை,
கொடுமுடி,
பெரியார் மாவட்டம்-
638 151.

பக்கம்: 144 விலை: ரூ.20

இனிமையும் எளிமையும் கொண்ட சொற்களால் யாக்கப்பட்ட 101 கவிதைகளின் தொகுப்புநூல் இது. மரபுக் கவிதைகள், சந்தக் கவிதைகள் கதம்பமாய் மணக்கின்றன; கரும்பாய் இனிக்கின்றன.

'அன்பமைந்த தூய்மைமிகு
குமுகா யத்தில்
அனைவருமே ஒருசாதி
அதுவே நீதி!'

என்பன போன்ற சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்துள்ள கவிதைகள் பல எழுத்துச் சுதந்திரத்தின் மேல் இவருக்குள்ள பற்றுதலை வெளிப்படுத்துகின்றது.

'வன்முறை யால்ஒரு
போதும் நன்மையை
வளர்த்திட முடியாது - இந்த
வையகத் தில்அது
வென்றிருந் தாலும்
நின்று நிலைக்காது!'

என்பன போன்ற சந்தப் பாடல்கள் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன. அவற்றுள் சில, ஏடுகளில் வெளிவந்தவை, வானொலியில் ஒலிபரப்பானவை. இந்த இனிய நூலைத் தமிழ் ஆர்வலர்கள் வாங்கிப் படித்து வற்றாத மகிழ்வடையலாம்.

— கங்கைகொண்டான்

### புலவர் சிறப்பு

ஆசிரியர் : கவிஞர் தமிழ்முடி

வெளியீடு :
தமிழ்முடி நிலையம்
எச். 10. கே. பொன்னம்பலம்
சாலை, கே. கே. நகர்,
சென்னை 600 078.

விலை: ரூ. 8.50 பக்கம்: 64

# நிர்வாக இயந்திரம் சீராக இயங்கிட அரசு அலுவலருக்கு வாகனம், கருவிகள்

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

கடந்த 24.8.1995 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், அரசின் மாவட்ட நிர்வாக இயந்திரம் சீராகவும், சிறப்பாகவும் இயங்க வழி செய்யும் வகையில் மாவட்ட அரசு அலுவலர்களின் பயனுக்கென வாகனங்களும், கருவிகளும் புதிதாகத் தேவையுள்ள ஒரு சில மாவட்டங்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அந்த அறிவிப்பின் அடிப்படையில் தற்போது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் நேரத்தில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு 12.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு V.H.F (Wireless) கருவி அமைத்துக் கொடுக்கவும், கன்னியாகுமரி மற்றும் தென்னார்க்காடு- வள்ளலார் மாவட்டங்களில் பணி புரியும் வட்டாட்சியர்களுக்கு ஜீப்புகள் வழங்கவும், கொடைக்கானலில் பணி புரியும் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர்களுக்கு ஜீப்புகள் வழங்கவும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், வட ஆர்க்காடு அம்பேத்கர்மாவட்டத்திற்கும் முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போது பயன்படுத்த கார்கள் வழங்கவும், சென்னை மாவட்டாட்சியர் அலுவலகத்திற்கு லைன் பிரிண்டர் (Line Printer) வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கருவிகளும், வாகனங்களும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

---

புகழ் பெற்ற புலவர்களான பிசிராந்தையார், காளமேகம், ஒளவையார், சேக்கிழார், தாகூர், போன்றவர்கள் வாழ்கையில் நிகழ்ந்த, அவர்களின் புகழுக்குக் காரணமான அரிய நிகழ்ச்சிகளையும். அந்நிகழ்ச்சியின் போது அவர்கள் பாடிய கவிதைகளையும் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

### தர்மத்தின் குரல்

ஆசிரியர் :
ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு :
சகுந்தலை நிலையம்,
58, ஐயப்ப செட்டி தெரு,
மண்ணடி,
சென்னை - 600 001.

விலை: ரூ. 30 பக்கம்: 212

மகாபாரதக் கதையை அறியாத இந்தியர் இருக்க முடியாது. சிந்திக்க வைக்க, படித்துப் பயன் அடைய, அதன்படி வாழ முயற்சிக்க உதவும் நூல் வரிசையில் முதன்மையானதும், மிக முக்கியமானதும் ஆகும் இது.

மகாபாரதக் கதையை எளிய நடையில், இனிய தமிழில் எழுதியுள்ளார் ஆசிரியர். கதை மாந்தரின் பட்டியல் மிகவும் உபயோகமான ஒன்று.

### காணிக்கை

ஆசிரியர் : மதுரை ஜேஸன்

வெளியீடு : எஸென்ஷியல்
பப்ளிகேஷன்ஸ்
1719-C திருச்சிப்பாதை
கோயம்புத்தூர் -
641 045.

விலை: ரூ. 5 பக்கம்: 90

மகாபாரதத்தில் ஓர் சம்பவம், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் ஆட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சி, பகவத் கீதை ஆகியவற்றை நாடகமாகவும், இவற்றோடு ஓர் சமூக நாடகத்தையும் கொண்டிருக்கிறது. இந்நூல், மேடையேற்ற நல்ல ஓரங்க நாடகங்கள் இவை.

—குமார்

# 16 கோடி ரூபாய் செலவில் 21,325 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மேம்பாடு!

## விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களை, விளை பொருள்கள் பயிரிடத் தக்க விளை நிலங்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், தரிசு நிலம் மேம்பாட்டுப் பணிகள் (Waste Land Development Project) விரைந்து அதிக அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஏற்கெனவே கருத்துத் தெரிவித்திருந்தார். தற்போது நடப்பாண்டில் (1995-96) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1. புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் 1.26 கோடி ரூபாய் செலவில் 2,155 ஏக்கர் நிலப்பரப்பு.

2. பெரியார் மாவட்டத்தில் 3.44 கோடி ரூபாய் செலவில் 4,000 ஏக்கர் நிலப்பரப்பு

3. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 2.85 கோடி ரூபாய் செலவில் 3,073 ஏக்கர் நிலப்பரப்பு.

4. தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் கடிலம் நதிப் படுகையில் (Gadilam River Basin) 2.50 கோடி ரூபாய் செலவில் 3,010 ஏக்கர் நிலப்பரப்பு.


5. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பொன்னையார் நதிப் படுகை (Ponniyar Watershed) 2.96 கோடி ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பு.

6. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செங்கம் நதிப் படுகையில் (Chengam Watershed) 2.56 கோடி ரூபாய் செலவில் 3,900 ஏக்கர் நிலப்பரப்பு.

7. மருந்துவாழ்மலைப் பகுதியில் 25 இலட்சம் ரூபாய் செலவில் தொழில்நுட்ப வளர்ச்சி, விரிவாக்கம் மற்றும் பயிற்சி (Technology Development, Extension & Training) என்ற திட்டத்தின் கீழ் 187 ஏக்கர் நிலப்பரப்பு.

—ஆகிய 7 இடங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள இந்த 7 திட்டங்களில் இணைந்து பணிபுரிய, அந்தந்த மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு முதலிடமும், 50 சதவிகிதத்திற்கும் மேலான பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், நலிந்த பிரிவினத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த ஏழு திட்டங்களும் இவ்வாண்டு விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்மைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்.




## ஏழை நோயாளிகளுக்கு

# இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும்!

# தனியார் மருத்துவமனைகளுக்கு


## —மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்

இந்த மாபெரும் சென்னை நகரில் இருதய நோய்ச் சிகிச்சை வளாகத்தில் இந்தப் புதிய இருதய நோய் மருத்துவ மனையைத் தொடங்கி வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இருதய நோய் சம்பந்தப்பட்ட பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு இன்னும் சிறப்பான பரிகாரங்கள், தீர்வு காண்பதில் முனைந்திருக்கும் மருத்துவ நிபுணர்களிடையே உரையாற்றுவதை ஒரு அரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன்.

டாக்டர் கே.எம். செரியன் மேற்பார்வையிலும், கண்காணிப்பிலும் இப்படிப்பட்ட ஒரு பிரம்மாண்டமான வளாகத்தைக் காண்பது மகிழ்ச்சி தருகிறது. அதற்கு ஒரு முக்கியக் காரணம், இந்தக் கட்டடத்துக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1992-இல் நான்தான் அடிக்கல் நாட்டினேன் என்பதாகும். டாக்டர் செரியனின் அந்த மகத்தான கனவு இன்று நனவாகி இருப்பதில் அகமகிழ்கிறேன்.

இந்த மாபெரும் மனிதாபிமானப் பணியில் பங்குபெற்ற முறையில் இதற்கு அடிக்கல் நாட்டியதிலும், இன்று தொடக்க விழாவில் பங்கு கொள்வதிலும், பெருமகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் செரியனுக்கும் எடுத்த பணியை 3 ஆண்டுகளில் சிறப்பாக முடித்த அவரது குழுவினருக்கும் என் மனப்பூர்வமான பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் இந்த அளவுக்கு ஈடுபாடு கொண்டு உழைத்திருக்காவிட்டால் மிக தரமான ஒரு மருத்துவமனையை அற்புதமான முறையில் கட்டி முடித்திருக்க இயலாது.

கலையிலும், கலாச்சாரத்






திலும் சர்வதேசப் புகழ் பெற்று நிற்கும் இந்தச் சென்னை மாநகரில் உலக மருத்துவ விஞ்ஞானப் பேரவைப் பிரதிநிதிகளை வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு தங்கியிருக்கும் சில நாட்களில், எங்கள் கலை, கலாச்சாரச் செல்வங்களை எல்லாம் பார்க்கும் வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள். இது மறக்க முடியாத நிகழ்ச்சியாகவும் என்றும் உங்கள் மனதில் நிற்கும்.

## சித்த, ஆயுர்வேத நாட்டு மருத்துவமுறை

எங்கள் நாட்டுக்குச் சிறப்பான மருத்துவப் பாரம்பரியம் உண்டு. பண்டைய சாஸ்திரங்களில் பெருநூல்களில் ஆயுர்வேதம், சித்த இயற்கை மருத்துவம் சிறப்பிடம் பெற்றுள்ளன. மூலிகை, பச்சிலை, வைத்தியம் மற்றும் நாட்டு இரசாயன முறைகள் ஆகியன எங்கள் மருத்துவ முறையில் தனி முத்திரைப் பதித்தவை. அதர்வண வேதம், மருத்துவ மேதைகள், சுஷ்ருதா, தன்வந்திரி ஆகியோர் இந்திய நாட்டு மருத்துவ முறையை செம்மைப்படுத்தியோர் ஆவர்.

மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதில் அந்த மருத்துவ மாமேதைகளுக்கு இந்த நேரத்தில் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மாற்று இருதயம், மாற்று சிறுநீரகம் முதலியன எல்லாம் புதிய அற்புதங்களாக வந்துள்ளன.

தென்னிந்தியாவில் முதலாவது வெற்றிகரமான இருதய மாற்றுச் சிகிச்சை மூலம் பெரும் புகழ் எய்திய டாக்டர், செரியனுக்கு இந்த நேரத்தில் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருதய மாற்றுச் சிகிச்சை, முதல் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் ஒரு வெற்றியினை அவர் கண்டிருக்கிறார்.


உலகின் முதலாவது இதய மாற்று ஆபரேஷன் செய்த டாக்டர் கிறிஸ்டியன் பர்னார்டு இங்கே வந்திருக்கிறார். அவருக்கும் முதலாவது மாற்று இருதயத்தைப் பெற்ற மிழுன் பீவிக்கும் ஒரே மேடையில் பாராட்டுத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## உயிரைக் காப்பாற்றுவதில் உள்ள மகிழ்ச்சி

இந்த மருத்துவத் துறைக்கு, மருத்துவ மேதைகளுக்குச் சமூகம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. ஓர் உயிரைக் காப்பாற்றுவதில் உள்ள மகிழ்ச்சியைவிடச் சிறந்த உயர்ந்த மகிழ்ச்சி வேறு இருக்க முடியாது.

நோய்த் துன்பத்தில் உழலும் மக்களின் துயர் தீர்க்க, இரவு பகலாகப் பாடுபடும் மருத்துவ நிபுணர்கள், ஆரோக்கியமான நல்வாழ்வு வாழ உதவும் அவர்கள், மிக சிறப்பான பாராட்டுக்கு உரியவர்கள்.

டாக்டர்களின் அரிய சேவை மட்டும் இல்லை என்றால், எத்தனையோ பேர் நோய்களாலும், தொத்து நோய்களாலும் மாண்டிருப்பார்கள்.




இந்த டாக்டர்கள் நம் பெரு மதிப்புக்குரியவர்கள். உன்னத மான தொழில் புரியும் டாக்டர்கள் ஹிப்போகிரேட் போன்ற மாமேதைகளின் கனவுகளை நனவாக்க முற்பட வேண்டும்.

மக்களின் உடல்நலத் திட்டங் களை ஏற்றுச் செயல்படுத்து வதில், தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் நான் பெருமை அடைகிறேன். மக்கள் நல்ம் காக்கும் சுகாதாரத் திட்டங் களுக்காக, இந்த ஆண்டில் மட்டும் நமது மாநில அரசு 666 கோடி ரூபாய் செலவிடுகிறது. இது நமது பட்ஜெட்டில் 7 சதவிகிதம் ஆகும்.

நோய்த் தடுப்பு, நோய்த் தீர்க்கும் பணி ஆகியவற்றில் அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இது புலப்படுத்துகிறது.

**75 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்ற திட்டம்**

குழந்தைகள் நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாகத் திடமாக வளரவேண்டும் என்ப தற்காக, நான் முதலமைச்சர் பொறுப்பு ஏற்ற பின்பு, 1992இல் மாபெரும் சுகாதார நலத் திட்டம் ஒன்றினை மேற்கொண்டேன். சிறுநோய்களைத் தீர்த்தல், மற்றும் பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தல் என்ற வகையில் இத்திட்டத்தின்கீழ் 75 இலட்சம் குழந்தைகள் பலன் பெற்றார்கள்.

இத்துடன் குழந்தைகள் நல மேம்பாட்டுக்காக 15 அம்சத் திட்டத்தையும் தமிழக அரசு மேற்கொண்டது. இதன்மூலம், குழந்தைகள் நல வளர்ச்சி ஒவ்வொரு கட்டத்திலும் கண் காணிக்கப்படுகிறது.

மாநிலக் குழந்தைகளுக்கு மிக நவீன மருத்துவம் உள்ளிட்ட அனைத்துச் சிகிச்சைகளும் இலவசமாக அளிக்கப்படு கின்றன. இருதயச் சிகிச்சைப் பிரிவில் மட்டும் 500 குழந்தைகள் பயனடைந்திருக் கின்றனர்.

**பிரபலமடைந்து விட்ட நோய்த் தடுப்பு முறைகள்**

முறையான அனைத்து மருத்துவ உதவியை மக்களுக்கு அளிப்பதிலும், எங்கள் அரசு முக்கியக் கவனம் செலுத்தி வருகின்றது. போலியோ தடுப்புக்குச் சொட்டு மருந்து, கண் புரைத் தடுப்பு, 'எய்ட்ஸ்' தடுப்பு, சிசுக்கள் அகால மரணம் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியன மிகப் பிரபலமடைந்து விட்டன. கி.பி. 2000 ஆண்டுக்குள் அனைத்து மக்களுக்கும் ஆரோக்கிய வாழ்வு, வசதி என்ற தேசியத் திட்டத்தின் இலக்கினை, தமிழகம் ஏற்கெனவே அடைந் தாகிவிட்டது.

தமிழகத்தில் பிறப்பு விகிதம் 1000க்கு 19 என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. தேசிய சராசரி 1000 பேருக்கு 28.6 சதவிகிதம் என்ற நிலையில் தமிழகம் 19 என்ற அளவுக்கு மாநிலங் களிடையே 2-வது இடம் வகிக்கிறது. கி.பி. 2000-க்குள் மக்கள் பிறப்பு விகிதம் 1000க்கு

15 என்ற அளவுக்கு இறங்கி விடும் என்று நம்புகிறேன்.

குழந்தைகளைப் பீடிக்கும் நோய்களைத் தடுப்பதில் அதற்கான தடுப்பு முறைகளில் தமிழகம் 100-க்கு 100 வெற்றி கண்டிருக்கிறது. யுனிசெப் நிறுவனமும், இந்த நோய்த் தடுப்புச் சாதனையைப் பாராட்டியிருக்கிறது.

தமிழகத்தில் சிசுக்கள் மரண விகிதம் 1000க்கு 59 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது. இந்த வகையில் தேசிய சராசரி 1000க்கு 73 என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை அளவைச் சீரான நிலையில் வைத்துக் கொள்வதில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. கி.பி.2010 வாக்கில் மக்கள் தொகைப் பெருக்கம் சமநிலை அளவினை அடைந்து விடும் என்று தெரிவித்துக் கொள்வதிலும் பெருமிதம் அடைகிறேன்.

### தனியார் நிறுவனங்களுக்கும் பொறுப்பு

மக்களுக்கு ஆரோக்கிய வசதிகள் அளிப்பதென்பதை அரசு நிறுவனங்களிடம்மட்டுமே விட்டு விடக்கூடாது என்பது எனது கருத்து. மக்கள் நலம் கருதும் அரசாங்கம் உள்ள நாடு இது. இந்த வகையில் அதிகமான பொறுப்பு அரசுக்கு உண்டு என்றாலும், மக்கள் உடல் நலம், ஆரோக்கியம் பேணுவதில் தனியார் நிறுவனங்களும் ஈடுபட வேண்டும்.

மருத்துவத் துறையில் வணிகக் கண்ணோட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. மருத்துவத் துறையின் தனியார் துறையினர் வர்த்தகம் சேவை இடையே ஒரு நியாயமான கண்ணோட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இலட்சோப இலட்சம் சாமானிய மக்களுக்கு நன்மை தரும் படியாக, புதிய சுற்றுச் சூழலை ஏற்படுத்த வல்லதாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் தனியார் துறையில் உள்ள மருத்துவ மனைகள், தங்கள் மருத்துவ மனைகளில் 10 அல்லது 15 சதவிகிதம் நோயாளிகளை அரசு மருத்துவமனைகளிலிருந்து ஏற்று, நல்லெண்ண முறையில் அவர்களுக்குச் சிகிச்சை தர வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கொடிய நோய் பீடிக்கப் பட்டவர்களுக்காக, இப்படிப் பெருந்தன்மையோடு செயல் பட்டால், ஏழை எளிய மக்களின் அன்பைப் பெறலாம், நல்லெண்ணமும், வளரும்.

இந்தியாவில் தனியார் துறை மருத்துவமனைகள் எனது இந்த யோசனையைப் பரிசீலிக்கும் என்று நம்புகிறேன்.

### போர்க்கால அடிப்படையில் இருதய நோய்ச் சிகிச்சை

இருதய நோய்ப் பிரச்சினைகள் பற்றி இன்று அதிகம் வலியுறுத்தத் தேவையில்லை. இருதய நோய்கள் மிக அபாய கரமான அளவில் ஏற்பட்டு வருகின்றன. இக்கால நவீன வாழ்க்கை முறையின் வேகமும், பரபரப்பும் இந்த நோயைப் பெருக்குகின்றன. போர்க்கால அடிப்படையில் இப்பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும்.

இருதய நோய்கள் பற்றி மருத்துவ நிபுணர்களின் இந்தப் பேரவை வளர்ந்து வரும் இந்தக் கொடிய நோய்க்கு ஏற்ற சிகிச்சை முறை காண வேண்டும். இருதய நோய்கள் பலவற்றுக்கு வந்த பிறகு சிகிச்சை தருவதைவிட 'வரும் முன் காப்பதே' சிறப்பானது.

### நம்பிக்கை ஒளி

வருங்காலத்தில் இந்த நோய்த் தடுப்புக்காக அதிகச் சிக்கல் இல்லாத எளிய முறைகள் வரலாம். இருதய நோயாளிகளுக்கு இதுவே நம்பிக்கை ஒளி ஆகும்.

---

**த**ம்மைச் சரிபடுத்திக் கொள்பவர் உலகைச் சரி படுத்தியவராவர்.

**—சுவாமி விவேகானந்தர்**

**அ**ன்பு எங்கிருக்கிறதோ, அங்கு பாசமும் பணிவும் அடைக்கலம்.

**—தாமஸ் கார்லைல்**

**அ**வரவர் முயற்சிகளுக்கு ஏற்ப அரியனவாயும், பெரியனவாயும் விளங்குவர்.

**—இராமலிங்க அடிகள்.**

# மதுரை மாவட்டத்தில்:

# பல்துறைப்பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி

அரசுப் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி, மதுரை மாவட்டம் தேனியில் 6.1.96 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், பல்துறைப் பணி விளக்க முகாமில் கண் காட்சியைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையரற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

"அரசின் பல்வேறு சாதனைகளை, இதுபோன்ற முகாம்களின் மூலமாக மக்களுக்கு விளக்கி அதை அவர்களுக்குத் தெரியும் வண்ணம் எடுத்துக் காட்ட வேண்டும். வேறு எந்த மாநில ஆட்சியிலும் காணாத சாதனைகளைத் தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி வருகிறார். வேறு வேறு ஆட்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட துறை சிறப்பாக இருந்தாலும், சில துறைகள் சரியல்ல என்று குறிப்பிடத்தக்க அளவில் இருக்கும். ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சியில் கால் நடை வளர்ச்சித்துறை முதல் நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை என எல்லாத் துறைகளிலும் சோடை போகாத அளவில் சாதனை நிகழ்த்தப் பட்டிருக்கிறது."

பல்துறைப்பணி விளக்க முகாமினைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

"ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் அரசு திட்டத்





தின் பலன் பயன் அளிக்கும். மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் தான் ஜனநாயகம் தழைக்கும். ஒவ்வொரு துறையும் எந்தெந்த வகையில் மக்கள் தொண்டில் என்னென்ன செய்துள்ளது என்பதை விளக்கவே இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

"இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாம் மூலம் மதுரை மாவட்டத்தில் **416** கிராமங்களில் வீடியோ மூலம் அரசு செய்திப் படக் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன. ***38*** இடங்களில் நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் அரசுத் திட்டங்கள் விளக்கப்படவுள்ளன. இப்படி, தமிழகம் பெருமைப்பட, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் அறிவுத்திறன், ஆற்றல்திறன் செயல்பாடு, அதை முடிக்கும் திறன் ஆகியவையே காரணமாகும்."

அரசு பல்துறைப்பணி விளக்க முகாம் தொடக்க விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

"எத்துறையிலும் முத்திரை பதிப்பவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். இதய தெய்வம் புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று ஆற்றிவரும் பணிகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல இதுபோன்ற முகாம்களை நடத்துகிறோம், எந்தத் திட்டம் எந்த நோக்கத்தோடு எப்படி யாருக்காகத் தீட்டப்பட்டதோ, அது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி விரும்புகிற வகையில் நடைபெறுகிறதா எனக் கண்காணிக்கவே இந்த அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம்கள் மற்றும் கண்காட்சிகள நடத்தப்பட்டு வருகின்றன. அரசின் சாதனைகளை, கொள்கைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாமைப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".

அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாமில் முன்னிலை வகித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் பேசியதாவது:

"சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் செய்த சாதனைகள், திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும் வண்ணம் இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம் நடத்தப்படுகிறது. **40** ஆண்டுக் காலம் செய்ய வேண்டிய சாதனைகளை எல்லாம் **4** ஆண்டுகளில் செய்து

# நெல்லை குண்டாறு நீர்த்தேக்க நீர் ஆதாரங்களை மேம்படுத்த ரூ.72.10 இலட்சம் ஒதுக்கீடு

தமிழகத்தில் உள்ள நீர் ஆதாரங்களுக்குத் தேவையான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, பாசன ஆதாரங்களை வளப்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்தார். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், படிப்படியாக, நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்தக் கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள குண்டாறு . நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள அனைத்து சிறிய நீர் ஆதாரங்களையும் மேம்படுத்தி சீர்படுத்துகின்ற பணியினைச் செயல்படுத்த ஏதுவாக 72.10 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

---

காட்டியுள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் இங்கு பல் துறைகளிலிருந்து அமைக்கப் பட்டுள்ள அரங்குகள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடியும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் தான் பல்வேறு துறைகளில் முதலிடம் பெறுகிறது. ஏழை, எளிய, நலிவுற்ற, மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வாழ்வ தற்காகக் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசியைக் கடந்த 1ந் தேதியில் இருந்து வழங்கி அவர்களின் வாழ்க்கை மேம் படச் செய்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தான்".

பல்துறைப்பணி விளக்க முகாமில் விளக்க உரையாக, தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

"தமிழக முதல்வரின் ஆணைப்படி இது 7-வது மாவட்ட முகாமாக மதுரை மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. சென்ற ஆண்டு 4 மாவட்டங் களில் இந்தப் பணி விளக்க முகாமை நடத்தியபோது மக்களி டையே அதன் பலன் மிகச் சிறப்பாகச் சென்றடைந்தது. இந்த வருடமும் அரசின் நலத் திட்டம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக 10 மாவட்டங்களில் நடத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். புதுக் கோட்டை, நீலகிரி, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, காமராஜர் ஆகிய மாவட்டங் களில் வெற்றிகரமாக நடத்தப் பட்ட பின் இங்கு நடக்கிறது."

இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாமில் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர் ராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே. தவசி, திரு எம். பெரியவீரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முன்னதாக மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை யின் துணை இயக்குநர் திரு மா. விசுவநாதன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் இராணிமங்கம்மாள் போக்கு வரத்துக்கழகத்தின் மெல்லிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம் விழா மேடையில் தினமும் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சி களும், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நாடகங் களும் நடந்தன. அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம் கண்காட்சியில் அனைத்துத் துறைகளின் சார்பிலும் 30 அரங்குகள் அமைக்கப் பட்டிருந்தன.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்க ரூ.82 கோடி ஒதுக்கியுள்ளோம். நிவாரணப் பணிகள் நடப்பதைப் பொறுத்து வரும் மார்ச் மாதத்தில் மேலும் பல கோடி ஒதுக்க உள்ளோம். மாவட்ட ஆட்சியாளர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

"மாவட்ட ஆட்சியாளர்கள் தாலுகா அளவில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வறட்சி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். இதற்காகப் பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் தலைமையில் தாலுகா அளவிலான குழுக்கள் அமைத்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நில நிர்வாக ஆணையாளர்களுக்கு வாராந்திர ஆய்வு அறிக்கைகளை மாவட்ட ஆட்சியாளர்கள் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும். தமிழகத்தில் வறட்சி பாதித்த 15 மாவட்டங்கள் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு மண்டலத்திற்கு 3 மாவட்டங்கள் வீதம் அரசுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

"வறட்சி பாதித்துள்ள 15 மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ள ரூ.185 கோடிக்கான குறுகிய காலக்கடன், மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்படுகிறது. மேலும் நீண்டகாலக் கடனாக வழங்கப்பட்ட ரூ.29 கோடியை வசூல் செய்யும் காலக்கெடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் விவசாயிகளுக்கு அன்னவாரிச் சான்றிதழ்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் வழங்கும் இந்தச் சான்றிதழ்களை வைத்துதான் கூட்டுறவு வங்கிகளில் கடன் விஷயத்தில் மேல்நடவடிக்கை எடுக்க முடியும். மேலும், 15 மாவட்டங்களில், 14 மாவட்டத்தில் நிலவரியை ரத்து செய்வதற்கான உத்தரவுகளை அன்னவாரிச் சான்றிதழ்கள் வழங்குவதைப் பொறுத்துப் படிப்படியாக உத்தரவுகள் வழங்கும்.

"தமிழகத்தில் வறட்சி பாதித்துள்ள மாவட்டங்களில் சாலைகள் அமைக்கும் பணிக்காக, முதற்கட்டமாக ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தஞ்சை மாவட்டத்தில் ரூ.10 கோடியும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ரூ.12 கோடியும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.3 கோடியும், இராமநாதபுர மாவட்டத்திற்கு ரூ.10 கோடியும் சாலை போட பிரித்து வழங்கப்படும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம், புதிய வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆலோசனையுடன் விடவுள்ளது.

"திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல், பழநி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல் ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ரூ.5 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர்கள் கூறிய பல்வேறு கருத்துக்கள் குறித்து ஆய்வு செய்து அரசு, விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

"புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு, விரைவில் முடிவு செய்யும். மாவட்ட ஆட்சியாளர்கள் வறட்சி பாதித்துள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் துரிதமாகவும், பயன்கள் நேரடியாக மக்களைச் சென்றடையும் வகையிலும் ஈடுபாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

"ஆரம்பத்தில் வறட்சி நிவாரணத்திற்காக ரூ.70 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தேன். ஆனால், இந்தக் கூட்டத்தில் 15 மாவட்ட ஆட்சியாளர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்களைத் தொடர்ந்து ரூ.266 கோடி ஒதுக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடுகிறேன். மேலும், மத்திய அரசை அணுகி தேசிய அளவிலான இயற்கைப் பாதிப்பு நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி பெற, திட்டம் தயாரித்து, மாநில அரசு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும்."

**மனிதன் உலகில் தன் சுய மரியாதையை - தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.**

**- தந்தை பெரியார்**

## " எனது மைத்துனரின் வியாபாரம் பெருகியது.

## லாபமும் அதிகரித்தது. கூடவே வரியும் கூடியது. "

### *வரிச் சுமையைத் தவிர்க்கும் ரகசியத்தை*

### *அவருக்கு நான் சொன்னேன்.*

**வி**யாபாரம். இந்த வார்த்தையைச் சொல்வது மிகவும் எளிது. ஆனால் அதைச் செய்வதுதான் கஷ்டம். வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு ஒவ்வொரு தினமும் ஒரு விதமான அனுபவம். வாழ்க்கையின் மேடு, பள்ளங்களை அனுபவிக்க ஒருவர் விரும்பினால் வியாபாரம் செய்து பார்க்கலாம்.

அதிர்ஷ்டவசமாக எனது மைத்துனர் மிகவும் அமோகமாக உள்ளார். - அதாவது அவரது வியாபாரம். ஆனால் துரதிருஷ்டவசமாக அவருக்குக் கிடைக்கும் லாபத்தை வரி விழுங்கிக் கொண்டிருந்தது. ஆண்டு வரவு-செலவுப் பட்டியலில் எழுத்தில் மட்டுமே லாபத்தை அவர் பார்த்தார்.

நிதி நிர்வாகத்தில் நான் வாங்கிய பட்டம் தக்க சமயத்தில் அவருக்குக் கைகொடுத்தது. பல்வேறு கவர்ச்சிகரமான முதலீட்டுத் திட்டங்களைப் பார்த்தபோது, வரியைத் தவிர்க்க அவை பயன்படாது என்று தெரிந்து கொண்டேன். ஆனால், ஒரு திட்டம் மட்டுமே எல்லாவற்றையும்விட சிறந்ததாக இருந்தது-அதுதான் மிகவும் நம்பகமான பாதுகாப்பான சிறுசேமிப்புத் திட்டங்கள்.

**தேசிய சேமிப்புத் திட்டம் (NSS), தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC), பொதுசேமநல நிதி (PPF).**

- **NSC & PPF** திட்டங்களுக்கு 12 சதவீத ஆண்டு வட்டி மற்றும் **NSS** திட்டத்திற்கு 11 சதவீத ஆண்டு வட்டி.
- ரூ. 60,000/. வரை செய்யப்படும் முதலீட்டிற்கு 20 சதவீத வருமான வரி விலக்கு.
- **NSS, NSC** திட்டங்களில் வட்டிக்கு ரூ. 13,000 வரை வருமான வரி விலக்கு.
- **PPF** திட்டத்தில் கிடைக்கும் வட்டிக்கு முழு வருமான வரி விலக்கு.
- ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கு 2 சதவீத ஊக்கத்தொகை.
- கவர்ச்சிகரமான பரிசுகளை வென்றிட பரிசுக் கூப்பன்கள்.


நான் இந்த ரகசியங்களை என் மைத்துனரிடம் சொன்னபோது, சற்றே தயங்கி, பிறகு நான் எதிர்பார்க்காத ஒன்றை அவர் சொன்னார். " என் அண்ணன் அதிர்ஷ்டசாலி. "

*வெளியீடு :*

**ஆணையர், சிறுசேமிப்புத் துறை**

சயர் மேன்ஷன், இரண்டாவது மாடி, 621, அண்ணாசாலை,
சென்னை-600 006. தொலைபேசி : 8251685, 8251784, 584440

சேமிப்போ சிறியது. பயன்களோ அதிகம்.





# குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழா



இந்திய நாடெங்கும் காவல்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல்படை போன்றவைகளில் சிறப்பாக மற்றும் பாராட்டத்தக்க வகையில் பணி செய்ப வர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் குடியரசு நாள் மற்றும் விடுதலை நாள் போன்ற விழாக்களில், மத்திய அரசு, குடியரசுத் தலைவர் பதக் கங்களை வழங்கி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் கடந்த 1993-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை 107 பேர்களுக்குக் குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழா, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 17.1.96-ஆம் நாள் கலைவாணர் அரங்கில் சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

விழா மேடையில் அனைவரையும் கவரத் தக்க வகையில் குடியரசுத் தலைவர் பதக்கங்கள் பொன்னிறத்தில் மின்னும் வகையில் அழகுபட பெரிதாக வடிவமைக் கப்பட்டு எடுப்பாக வைக்கப்பட்டிருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், பதக்கம் பெறுபவர்களுக்கு எளிதாக, பதக்கங்களை அணிவிக்க வசதியாக, நகர்த்தக் கூடிய சிறு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அவ் வப்போது நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்காக நேர்முக வர்ணனை யாளர்கள் தயார் நிலையில் இருந்து கொண்டிருந்தார்கள். கலைவாணர் அரங்கம் நிரம்பி வழிந்தது.

விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்களும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., அவர்களும் எதிர்கொண்டு வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டவுடன் அனைவரும் எழுந்து நின்று முதல்வர் அவர்களுக்கு

மரியாதை செலுத்தினர். தொடர்ந்து காவல்துறைத் தலைவர் திரு தேவாரம் அவர்கள் அழகான மலர்க்கூடை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உவந்தளித்து வரவேற்பு நல்கினார்.

நிகழ்ச்சியன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்ட பதக்கங்களைக் காவல் துறையினர் 64 பேர்களும், தீயணைப்புத் துறையினர் 32 பேர்களும், ஊர்க்காவல் படையைச் சார்ந்தவர்கள் 11 பேர்களும் பெற்றார்கள்.

தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் மற்றும் பாராட்டத்தக்க பணிக்கான காவல் பதக்கங்களைப் பெற்றவர்களில் குற்றப் பிரிவுக் கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு வி.கே. ராஜகோபாலன், சென்னை நகர நுண்ணறிவுப் பிரிவுக் கூடுதல் காவல்துறைத் துணை ஆணையாளர் திரு எஸ். இருதயதாஸ், கூடுதல் துணைக் காவல் தலைவர் திரு பி.எஸ். கணபதி, சட்டம்-ஒழுங்கு கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு எஸ். குமாரசாமி, கோவைச் சரகத் துணைக் காவல் தலைவர் திரு டி. ராதாகிருஷ்ணன், காவல்துறைக் கூடுதல் தலைவர் திரு ஏ.எக்ஸ். அலெக்ஸாண்டர், சிறப்புப் பாதுகாப்புக் குழு காவல்துறைத் துணைத் தலைவர் திரு கே. விஜயகுமார், குற்றப் புலனாய்வுத்துறை துணைத் தலைவர் திருமதி லத்திகாசரண், சென்னை மாநகரக் காவல்துறை இணை ஆணையாளர் திரு ஆர்.என். சவானி, மதுரை மாநகர ஆணையாளர் திரு எஸ்.வி.வெங்கட கிருஷ்ணன், சென்னைத் தலைமையிடக் காவல்துறைத் துணைத் தலைவர் திருமதி அர்ச்சனா ராமசுந்தரம் உள்ளிட்ட 64 பேர் அடங்குவர்.

**தீயணைப்புப் படை**

தீயணைப்புப் படைத் துணை இயக்குநர் திரு நமச்சிவாயம் மற்றும் தீயணைப்பு அலுவலர்கள் திரு பொன். முருகேசன், திரு பக்தன், திரு இராமசாமி, திரு சையது சுல்தான் உள்பட 32 பேர் இந்தியக் குடியரசுத் தலைவர் தகைசால் பணிக்கான தீயணைப்புத்துறைப் பதக்கங்களைப் பெற்றனர்.

**ஊர்க்காவல் படை**


கடலூர் விழுப்புரம் சரகத் துணை ஊர்க்காவல்படைத் தலைவர் திரு எல். ஜெயச்சந்திரன், சென்னை வட்டாரத் தளபதி திரு ரெங்கநாதம், உதவிப் படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜி. சகுந்தலா, நீலகிரி மாவட்டத் துணை ஊர்க்காவல்படைத் தலைவர் திரு கே.ஆர். மணி, நாகை காயிதெ மில்லத் மாவட்ட உதவிப் படைப்பிரிவுத் தளபதி திரு வரதராஜன் போன்றோர் பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங் களை மாண்புமிகு முதல்வர் அவர் களிடமிருந்து பெற்றார்கள்.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற கூடுதல் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு ஜி. பிரான்க் பிரகாசம், பணியாற்றும்போது காலமான காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு எஸ்.ஏ.பாரூக் மற்றும் காவல்துறை ஆய்வாளர் திரு கே. சீனிவாசன் ஆகியோரின் துணைவியார்களிடம் உரிய பதக்கங்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

உள்துறைச் செயலாளர் திரு ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்புரையும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., அவர்கள் நன்றி யுரையும் ஆற்றினர்.

நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலாக முதல்வர் அவர்கள் பதக்கங்களை வழங்கினார். மொத்தத்தில் குடியரசுத் தலைவர் பதக்கம் அளிக்கும் விழா மிகவும் கட்டுக்கோப்போடு சிறப்பாக அமைந்திருந்தது.

**—நிகழ்ச்சித் தொகுப்பு:**
**மா. அசோகன்.**



# கரூரில் மாநில அளவிலான தந்தை பெரியார் பிறந்தநாள் விழா

கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம், கரூரில் தமிழக அரசின் சார்பில், மாநில அளவிலான தந்தை பெரியார் பிறந்தநாள் விழா 29.12.95 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் விழாவிற்கு முன்னிலை வகித்து பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில், கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த. ஜேக்கப், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் மண்ணில் மகத்தான புரட்சியை உருவாக்கிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள், தந்தை பெரியார் தோன்றி இருக்காவிட்டால் இன்றைக்கும் அமுக்கி வைக்கப் பட்டுதான் இருப்பார்கள்.

"தந்தை பெரியார் ஆற்றிய தொண்டை இந்த நாடு நன்றியோடு நினைத்துப் பார்த்துக்

கொண்டிருக்கிறது. அவர் ஒரு தீர்க்கதரிசி. மறைந்த தந்தை பெரியார், பல பேர்களுக்குத் தலைவராக இருந்தார். ஆனால், அவருக்குத் தலைவர் யாரும் இல்லை. பெரியார் மறைந்ததற்குப் பிறகும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தந்தை பெரியார் மிகப் பெரிய சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், தீர்க்க தரிசியாகவும் விளங்கியவர். உலகில் எத்துணையோ சீர்திருத்தவாதிகள், தலைவர்கள் வாழ்ந்தார்கள் என்றாலும், தங்கள் கொள்கைகளில் அவர்கள் தங்கள் காலத்தில் வெற்றி பெற முடியவில்லை.

விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் பேசியதாவது:

"தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கொள்கைகளைக் காங்கிரஸ் ஏற்காததால் அதை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தந்தை பெரியார் ஆரம்பித்தார். பின்னர் 'குடியரசு' பத்திரிகையை ஆரம்பித்து எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். தான் தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினார்.

"தந்தை பெரியாரின் கொள்கைகளான விதவைத் திருமணம், கலப்புத் திருமணம் ஆகியவற்றை எல்லாம் சட்டமாக்கியவர் பேரறிஞர் அண்ணா. எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை இதயதெய்வம் புரட்சித்தலைவிதான் செயல்படுத்தினார்.

**சாதியற்ற, உயர்வு தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.**

**- தந்தை பெரியார்**

"ஆதிதிராவிடர்களும் இன்றைக்கு வேதாகமக் கல்லூரியில் படித்துவிட்டு அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற நிலையை உருவாக்கியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவிதான். இந்தி வரக்கூடாது என்பதற்காக, பேரறிஞர் அண்ணாவைத் தலைவராக்கிப் போராட்டம் நடத்தியவர் தந்தை பெரியார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் பேசியதாவது:

"தந்தை பெரியாரின் கொள்கைகள் பத்தாயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கக் கூடியது. தந்தை பெரியார் பெண்ணுரிமை வேண்டும் என்றார். எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்று சொன்னார். சாதி, மதம் கூடாது என்று சொன்னார். இப்படிப்பட்டக் கொள்கைகளை இன்றைக்கு அகில உலகமே போற்றுகின்றது. இன்றைக்குத் திராவிட இயக்கம் தமிழகத்தின் ஆட்சிக்கு வந்த பிறகு தான் பட்டாதாரர்கள், மிராசுதாரர்களின் அதிகாரம் ஒடுக்கப்பட்டு பட்டாளி வர்க்கத்தினர்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்றால் இவற்றிற்கு எல்லாம் மூலகாரணம் தந்தை பெரியார்தான்.

"சாதி வேறுபாடு கூடாது என்ற தந்தை பெரியார் கூறினார். ஆனால், இன்று சாதிக் கலாச்சாரம் நிலவுகின்றது. இதற்குக் காரணம் சாதித் தலைவர்கள். சாதித் தலைவர்களை ஒதுக்க வேண்டும்.

"சாதிகளை ஒழித்திடவும், மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்திடவும், பெண்ணுரிமை நிலை நாட்டவும், தந்தை பெரியார் பாடுபட்டவர். அதுபோல அவர் வழியிலேயே தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு அ. பாப்பாசுந்தரம், திரு எம். தங்கவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் ரூ.48 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் வழங்கினார். விழா வினையொட்டி, கரூரில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழா முடிவில் திருச்சிராப்பள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு கோ. பன்னீர் செல்வம் நன்றி கூறினார்.



# திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாளை யொட்டி, தமிழக அரசின் சார்பில், திருவள்ளுவர் விருது மற்றும் சிறந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கும் விழா, 19.1.96 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமைத் தாங்கினார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை சிறப்பு ஆணையர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

1996-ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் பெற்றார். அவருக்கு ரூ.20 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

கடந்த 1995-ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருதைப் பேராசிரியர் டாக்டர் க.பொ. ரத்தினம் அவர்கள் பெற்றார். இவருக்கு ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

கடந்த 1995-ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் விருதைக் கவிஞர் அ. மறைமலையான் அவர்கள் பெற்றார். இவருக்கு ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கப் பட்டது.

வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 13 பேருக்கு மாதம் 400 ரூபாய் உதவிப் பணமும், சிறந்த பதிப்பகத்தார் 36 நபர்களுக்குச் சான்றிதழ்களும், சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 38 நூல் ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் விருது களையும், பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பேசும்போது கூறியதாவது:

"இந்த அரசு, தமிழர்களுக்குத் தமிழ் உணர்வு கொண்டவர் களுக்கும், தமிழ்ச் சான்றோர் களுக்கும் மரியாதை தந்து உள்ளது. தமிழ் பயிற்று மொழி ஆக்குவது பற்றி அரசு, ஆய்வு செய்து வருகிறது' என்றார்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை சிறப்பு ஆணையர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தமது சிறப்புரையில் "வடக்கின் ஆதிக் கத்தைத் தடுத்து வண்டமிழைப் பாதுகாக்கும் தன்னிகரற்ற ஒரே முதல்வர் புரட்சித்தலைவிதான். அவருடைய ஆட்சிக் காலத்தில், தமிழ் மேலும் வளரும், வாழும், தழைக்கும்" என்றார்.

திருவள்ளுவர் விருது பெற்ற பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் தனது ஏற்புரையில் கூறியதாவது: "மனித அறிவை, மொழி அறிவை வளர்ப்பதற்கு அரசு முன் வருகிறது. சிறந்த நூல் எழுதுபவர்களுக்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் பொருள் உதவி தந்து உதவ வேண்டும்" என்றார்.

திரு.வி.க. விருது பெற்ற பேராசிரியர் டாக்டர் க.பொ. ரத்தினம் அவர்கள் தமது ஏற்புரையில் "உலகெங்கும் வாழும் தமிழன் தமிழகத்தைத் தான் பார்க்கிறான். உலகத் தமிழ்ச் சங்கத்தை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

பாவேந்தர் விருது பெற்ற கவிஞர் அ. மறைமலையான் அவர்கள் தமது ஏற்புரையில், "மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்குத் "தமிழ் காத்த வீராங்கனை" பட்டம் கொடுக்க வேண்டும். தமிழைக் காப்பாற்ற சட்டத்தை உருவாக்க வேண்டும்" என்றார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் திரு இரா. கிறிஸ்துதாசு காந்தி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) திரு ஆ. பன்னீர் செல்வம் நன்றி நவின்றார்.

# ஊரக மாணவ மாணவியருக்கு ஊக்குவிப்பு உதவித்தொகை

கிராமப் புறங்களில் கல்வி பயிலுகின்ற மாணவ மாணவியர்களிடையே கல்வி கற்கும் திறனை வளர்ப்பதற்கும் அவர்களுடைய தனித் திறமையை வெளிக்கொணர்வதற்கும் நிதி உதவி வழங்குகின்ற, "தமிழ்நாடு ஊரக மாணவ மாணவியருக்கு ஊக்குவிப்புக் கல்வி உதவித்தொகைத் திட்டம்" (Tamil Nadu Rural Students Talent Search Scholarship Scheme) ஒன்றுக்கு ஒப்புதல் அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும், இத்திட்டத்தினைச் செயல் படுத்துவதற்காக 89 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 1995-96-ஆம் கல்வி ஆண்டிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமென கல்வித் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 மாணவர்களும் மொத்தம் 50 மாணவி களுமாக வீதம் 100 பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். தமிழகம் முழுவதிலுமிருந்து இவ்வாறு கிட்டத்தட்ட மொத்தம் 2,400 மாணவ மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு முடிக்கும் வரை, இந்தச் சிறப்புக் கல்வி உதவித்தொகை அவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டு தேர்வு முடிவிலும், அவர்கள் குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண்களைத் தேர்வுகளில் பெற வேண்டும். எனவே, இந்தக் கல்வி உதவித்தொகை தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும். இந்தச் சிறப்புக் கல்வி உதவித்தொகைத் திட்டம், கிராமப்புறங்களில் பயிலுகின்ற மாணவ மாணவியர்களின் தனித் திறமைகளை ஊக்குவிப்பதற்கென தொடங்கப்பட்டிருப்பதை மனதில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஒரு புதிய முனைப்போடு செயல்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப் பித்துள்ளார்.

---

மனம் அலைபாயாமல் இருக்கவும், மெய்ப்பொருளின் மீது சிந்தை நிலைத்து நிற்கவும், ஆசையை ஒடுக்க வேண்டும்.

—ஆதிசங்கரர்

நல்லவனாக இருப்பது எளிது. ஆனால், நேர்மை யானவனாக இருப்பது கடினம்.

—ஹியூகோ

நல்லது எதுவும் தானாக வருவதில்லை. நாம்தான் தேடிக் கொண்டு வரவேண்டும்.

—பர்ட்டன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

